உற்றதுணை உள் ஒளியே

திருஅருட்பிரகாசவள்ளலார்




ஞானதீபம்



சத்திய ஞானசபை



திருமருதூர்



கல்பட்டுஜயாசமாதி



திருஅருட்பா





சித்திவளாகம்



நீரோடை



சத்தியதருமச்சாலை



சாலை கிணறு

தெளிவுரை

அருளுரை க. கிருஷ்ணமூர்த்தி

திருஅருட்பிரகாச வள்ளலார்

அருளிய

உற்றதுணை உள் ஒளியே!

தெளிவுரை

அருளுரை **க. கிருஷ்ணமூர்த்தி**

திருவருள் பதிப்பகம்
28, வள்ளலார் நகர்,
வேம்பம்பட்டு அஞ்சல்
திருவள்ளூர் – 602024
அலைபேசி : 9940233935

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: உற்றதுணை உள்ஒளியே
பதிப்பாண்டு	: முதல்பதிப்பு, சூலை, 2008
பிரதிகள்	: 3000
உரிமை	: ஆசிரியர்க்கு
ஆசிரியர்	: அருளுரை க. கிருஷ்ணமூர்த்தி
நூலின் அளவு	: கிரவுன்
பக்கங்கள்	: 56
விலை	: ரூ. **15.00**

அச்சும் அமைப்பும்
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600 108

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021.
தொலைபேசி : 25954528

திருச்சிற்றம்பலம் அருட்பெருஞ்ஜோதி

நமக்கு உற்றதுணை உள் ஒளியே!

பாடல் - 1

1. கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவு நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலம்காண் கின்றீர்
குணத்தோடேகுறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்து உலகீரே

குறிக்கோளோடு வாழ்க

கண்ணுங்கருத்துமாக நம்முள்ளிருந்து காக்கின்ற கருத்தனை (அருட்பெருஞ் ஜோதியை) இடைவிடாது நினைக்க வேண்டும். **"தாயாகி தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம், கண்ணாக காக்கின்ற கருத்தனை நினைந்தே கண்ணார நீர் விட்டு கருதறியீரே"** (திருவருட்பா) இதை மறந்து சாதிமத கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதில் தலைவர் (கனம்) பதவிகளை பெறுவதில்காலத்தை வீணாக்குகின்றனர். அருட்பெருஞ்ஜோதி (நம்முள் உள்ள) ஆண்டவர் ஒருவரே என்பதை மறந்து பல ஆயிரக்கணக்கான தெய்வங்களை புறத்தே ஏற்படுத்தி சாதிசமய மத இனம், மொழி, நாடு போன்ற பலபேதங்களை ஏற்படுத்தியது வேதாகமங்கள். ஆச்சார சங்கற்ப விகற்பம் (கட்டுபாடுகளை) ஏற்படுத்துவதும், அவைகளுக்குள்ள தலைவர் நிருவாகி போன்ற பதவிகளைப் பெற்றால் மக்கள் மதிப்பர் (கனம்) என விரும்புவதும் பெரிதாக கருதினர்.

ஒரு வியாபாரி தம் வீட்டிற்கு முன்னே தெருவில் பசியோடு வந்து பிச்சைகேட்டால் உள்ளே இருந்து கொண்டு (பார்த்தால் பாவம் என நினைத்து) சாப்பாடு இல்லை போ என துரத்திவிடுவார். **"ஒருவர் தன்தகுதிக் கேற்றவாறு**

பசித்தவிர்த்தலையே விரதமாக கொள்வாரேயானால் அவருக்கு சந்ததி இல்லை என்றால் சந்ததி கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும் எனும் சன்மார்க்க கொள்கையை உணராதவரே அந்த வியாபாரி. அவர் தன் குடும்பத்தாரை பார்ப்பவர்கள் மதிக்க வேண்டுமென பட்டு பீதாம்பரங்களை, அணிகலன்களை (பண்ணியோடே) அணிந்து கொண்டு கோயிலுக்குச் சென்று குழந்தை வேண்டி அபிஷேக ஆராதனைகளுக்கு ஆயிரக்கணக்கில் செலவு செய்வார்.

நித்திய வாழ்வு பெறும் குறிக்கோளுடன் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து உத்தமனாக வாழ வேண்டும்,, "சன்மார்க்க சங்கத்தைச் சார விழையீர், சாவையும், பிறப்பையும் தவிர்க்க விரும்பீர். மக்கள் தன்னை போற்றி புகழ்வதே பெறும்பாக்கியம் என்ற குறிக்கோளுடன் மேளதாளங்கள் முழக்கமிட விழாக்கோலம் நடத்துவது அறியாமை. என் சாண் உடம்பு (எட்டு) நாசியின் இரு துவாரங்களில் வரும் மூச்சுகள் இரண்டு உள்ஒளி வெளியேறினால் மூச்சு நின்றுவிடும். (உயிர் போய்விடும்) "வாசிநடத்தி தருவாண்டி" வாசி நடத்துவது உள்ஒளியே (ஆண்டவர்) அவர் நல்லகாற்று உள்ளே செல்லவும் கெட்டகாற்று வெளியே செல்லவும் செய்கிறார். மனது சிவ சிவ என்று ஓத வேண்டும். (எண்ணுதல்) எட்டோடே இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர். மனதை உலக ஆபாசத்தில் செல்லாமல் தடுத்து புருவமத்தியில் நிறுத்துவது தான். உடல், உயிர், உள்ளம் ஒன்று சேர்ந்து இறைவனை நினைத்துக் கொண்டு எதையும் செய்யும் போது உள்ஒளி உடலைவிட்டு விலகாது, துணையாயிருந்து நித்திய வாழ்வை அளிக்கும். அ = எட்டு, உ = இரண்டு, சி = இயற்கை உண்மை, வ = இயற்கை விளக்கம், ம் = இயற்கை இன்பம். உள்ளது (உண்மை) விளங்க இன்பம் (சிவம்) இல்லது (கற்பனை) விளங்க சவம். அருட்ஜோதி சிவத்தை இடைவிடாது நினைக்க (எண்ணுதல் வேண்டும்) அதுவே நமக்கு உற்ற துணையாகிற மந்திரமாகும். "சிகரமும், வகரமும், சேர்தனி உகரமும். அகரமுமாகிய அருட்பெருஞ்ஜோதி". "அகரமும் உகரமும் அழியாச் சிகரமும் வகரமுமாகிய வாய்மை மந்திரமே"

 4-4

பாடல் - 2

ஆறாமல் அவியாமல் அடைந்த கோபத்தீ அடர்வுற
உலகிடை அஞ்சாது திரிவீர்
மாறாமல் மனஞ்சென்ற வழிசென்று திகைப்பீர்
வழிதுறை காண் கிலீர் பழிபடும் படிக்கே
நாறாத மலர் போலும் வாழ்கின்றீர் மூப்பு
நரை திரை மரணத்துக்கு என்செயக் கடவீர்
ஏறாமல் வீணிலே இறங்குகின் றீரே எத்துணை
கொள்கின்றீர் பித்துல கீரே

கோபமே கூற்றுவனாக மாறும்

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தான் இச்சையை உண்டாக்குகிறார். "**அம்பலப்பற்றே பற்றுமினோ என்றும், இறவீரே இச்சையெலாம் எனக்களித்தே எனைக்கலந்த தெய்வம்.** இச்சன்மார்க்க கொள்கை தவறு செய்யதடை விதிப்பதால் ஏற்க மறுக்கிறார்கள். சமய மதங்கள் கூறும் புறத்தில் வழிபடும் கற்பனைக் கடவுள்களை உண்மை என நம்பி ஏமாறுகிறார்கள். **இச்சையில் கண்மூடி எச்சுகம் கண்டீர்.** சன்மார்க்கத்திற்கு புறம்பான வழியில் மனம் சென்று பொருள் சம்பாதிக்கும். பழி பாவம் ஏற்படும் என்றும் தெரியும். கோயிலுக்கு சென்று ஆயிரக்கணக்கில் செலவு செய்து அபிஷேக, ஆராதனைகளை நடத்துவது தான் பழி பாவத்திற்கு பரிகாரம் என நம்பி தொடர்ந்து (மாறாமல்) தவறு செய்கின்றனர். நடுங்கும்படி (திகைக்கும்படி) தொல்லைகள் துன்பங்கள் ஏற்பட்டாலும் சன்மார்க்க வழியை பின்பற்றுவோம் என (மாறமாட்டார்கள்) திருந்த மாட்டார்கள்.

தன்னைப் போலவே உலக மாயையில் மயங்கிய ஒருவர் மனம் போன போக்கில் தவறாக பொருளீட்ட முற்படும்போது அவர் தன்னோடு மோதும் நிலை ஏற்படும். இருவர் செய்வதும் தவறு. ஒருவர் தவறு என உணர்ந்து விட்டுக்கொடுத்து திருந்தலாம். "**அணுத்துணையும் சினம், காமம், அடையாமை வேண்டும். சினமுடைய கூற்றுவரும்**

செய்தி அறியீரோ செத்த நுமது இனத்தவரை சிறிது நினையீரோ" இருவரும் கோபத் தீயை தணிக்கமாட்டார்கள். (ஆறாமல்) அறவே ஒழிக்க மாட்டார்கள். (அவியாமல்) சிறுதீ பெருந்தீயாக மாறுவது போல பொங்கி (அடர்வுற) எழுவர். சினத்தால் சண்டையும் கொலையும் நிகழலாம் என தெரிந்தும் அஞ்சாது போரிட்டு தொல்லை துன்பத்திற்கு ஆளாவார்கள்.

நயத்தால் உனது திருவருளை நண்ணாக் கொடியேன் நாயுடம்பை உய்யத்தான் வையேன். அன்பால் (நயம்) தான் ஆண்டவர் திருவருளைப்பெற நெருங்க முடியும். (நண்ண) நாய்போல் அலையும் இவ்வுடல் மண்ணுக்கு இறையாகாமல் உய்வதற்கு வழி சன்மார்க்க சங்கத்தை சார்வதுதான். **இன்புறலாம் எவ்வுலகமும் ஏத்திட வாழ்ந்திடலாம் எல்லாம் செய் வல்ல சித்தி இறைமையும் பெற்றிடலாம்** என்பதுதான் நறுமணம் வீசும் மலராவது. சுத்த சன்மார்க்க சங்கத்தவர்களால்தான் பிணி மூப்பு பயம், துன்பம், நரை, திரை மரணம் போன்றவைகளை எதிர்த்து நின்று தடுக்க முடியும். உலகத்திலேயே மற்ற எவராலும் தடுக்க முடியாது. இதுவே ஏறும் நிலை, உய்யும் வழி. சன்மார்க்கம் தொண்டு நிறுவனமாக மாறும்போது இயற்கை சீற்றத்தையும் தடுக்கும். நமக்கு துணையாயிருக்கும் மார்க்கம் சன்மார்க்கம். கல்பட்டு ஐயாவிற்கு தொண்டும் உண்டுங்காண் என்று பெருமான் சொன்னார்.

பாடல் - 3

ஆயாமையாலே நீர் ஆதி அனாதி ஆகிய
ஜோதியை அறிந்து கொள் கில்லீர்
மாயாமை பிறவாமை வழியொன்ம் உணரீர் மறவாமை
நினையாமை வகைசிறிதறியீர்
காயாமை பழுக்கின்ற கருத்தையும் கருதீர் கண்மூடித்
திரிகின்றீர் கனிவோடு இரப்போர்க்கு
ஈயாமை ஒன்றையே இன் துணை என்பீர்
எத்துணை கொள்கின்றீர் பித்து உலகீரே

சன்மார்க்க வல்லபம் காயாமை பழுப்பது

பரிதாபத்தோடு (கனிவோடு) பசிக்கு சோறு கேட்டாலும் (பிச்சை) கொடுக்கும் தகுதி இருந்தும் அந்த உணவு ஒரு வேளைக்கு நமக்கு உதவும் என்று கருதி கொடுக்காமலிருப்பது (ஈயாது) ஒன்றையே துணை என்பவரும் உண்டு. சமய மதத்தினர் கூறும் கற்பனை தெய்வ வழிபாட்டில், மூட நம்பிக்கையோடு அபிஷேக ஆராதனைக்கு **கண் மூடித்தனமாக** ஆயிர கணக்கில் செலவிட்டால் பணம் சேரும் என நம்பி ஏமாறுகிறார்கள். ஈ **காதலுடையவர்களுக்கே இருநிதி அளித்து இன்புறுகின்ற இறைவர் தான். அவரே நம்முள் உள்ள அருட்பெருஞ்ஜோதி. ஒருவன் தகுதிக்கேற்றவாறு பசித்தவிர்த்தலையே விரதமாகக் கொண்டு** அன்னதானம் செய்தால் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும் தொழில் முன்னேற்றமாகும், தீராத நோய் தீரும்.

பிறருக்கு உதவுவதை விருப்பமாக் கொண்டு (ஈ காதல்) பசிதவிர்த்தலை அன்போடும், இரக்கத்தோடும், ஜீவகாருண்ய சன்மார்க்க தொண்டு செய்பவருக்கு பெருநிதி (இருநிதி) அளித்து இறைவன் இன்புறுகிறார். **தமக்கோர் ஆதி இல்லார் அந்த மில்லார் அருட்பெருஞ்ஜோதியார். எச்சமய தெய்வங்களும் தான் என நின்ற தெய்வம். மனித தேகத்தில் காரியப்படுகிறார். சிலைகளை வழியடுவது மூட நம்பிக்கை. தீப முன்னிலையில் ஆண்டவர் விளங்குவதாக பாவித்து பிரார்த்தனை செய்வது சன்மார்க்க வழிபாடு. சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து சிந்தித்து பார்க்காததால் (ஆயாமையால்) சமய மதத்தை சாராத உலகத்தவருக்கு உண்மை தெரியவில்லை.**

பிறந்தவர் ஒருநாள் இறந்து தான் தீரவேண்டும் என்பது சன்மாாக்க சங்கத்தை சாராதவர் கூறும் வார்த்தையாகும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருளை பரிபூரணமாகப் பெற்று ஊன் உடலை ஒளி உடலாகப் பெற்று திருவருட்பிரகாசராக விளங்குகிறார் வள்ளலார். இன்றும் உலகெங்கும் சன்மார்க்கத்தை பரப்பிக்கொண்டிருக்கிறார்.

இந்த மாயாமை (இறவாமை) பிறவாமை வழியெலாம் சன்மார்க்கத்தில் தான் உணரமுடியும். **மாலும் துஞ்சுவான் மலரவன் இறப்பான் என்பது** காக்கும் கடவுள் திருமாலுக்கு வயது 15,000 ஆண்டுகள் படைக்கும் கடவுள் (மலரவன்) பிரம்மாவிற்கு வயது 10,000 ஆண்டுகள். மனிதனுக்கு வயது குறைந்தது 100 ஆண்டுகள். **மூவரும் தேவரும், முத்தரும்,சித்தரும் யாவரும் பெற்றிடா இயல் எனக்கு அளித்தனை** என்கிறார் நித்தியவாழ்வு பெற்ற பெருமான்.

நம்முள்ளிருந்து நம்மை **கண்ணாககாக்கின்ற கருத்தனை நினைந்து கண்ணார நீர்விட்டு கருதறியீரே. எவ்வகைத்தான் தவம் செயினும் எய்தரிதாம் தெய்வம். எனக்கு எளிதில் கிடைத்து என்மனம் இடம் கொண்ட தெய்வம்.** உலக வழக்கு பூ, பிஞ்சி,காய், பிறகுதான் பழம். நினைத்த மாத்திரத்தில் தாமதிக்காது பழமே கிடைப்பது சன்மார்க்கத்தில் தான் முடியும். சன்மார்க்கத்தைச் சார்ந்து மெய்ப்பொருளை (கடவுளை) உணர்ந்து, மெய், நெறியை கடைப்பிடித்து இடைவிடாது அன்போடு நம்முள் உள்ள அருட்பெருஞ்ஜோதியை நினைத்து இரக்கத்தோடு உயிர் நலப்பணி செய்தால் ஆண்டவர் திருவருள் கிட்டும். அதுவே நமக்கு துணையாகும்.

பாடல் - 4

சாமாந்த ராகாத் தரஞ்சிறிது உணாீ் தத்துவ
ஞானத்தை இற்றெனத் தெரியீர்
மாமாந்த நோயுற்ற குழவியிற் குழைந்தீர்
வாழ்க்கையில் அற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்
காமாந்த காரத்தில் கண்மூடித் திரிவீர் கற்பன
கற்கிலீர் கருத்தனைக் கருதாது
ஏமாந்து தூங்குகின்றீர் விழிக்கின்றீர் எத்துணை
கொள்கின்றீர் பித்து உலகீரே

உள்ஒளியை மங்கச்செய்யும் சிற்றின்பம்

காமந்தகாரம் என்பது பல பெண்கள் தொடர்பு கொண்டு சிற்றின்ப சேற்றில் சிக்குவதாகும். பஞ்சமா பாதகராக

மாறுவார்கள். இழந்த உடல் வலிவைப் பெற மாமிச உணவுகளையே விரும்புவர். மதுஅருந்துவர். சிகரெட் போன்ற லாகிரி வஸ்த்துக்களை பயன்படுத்துவர். பசிக்கு தான் சாப்பிட வேண்டும் என்பதை மறந்து ருசி தரும் சத்துள்ள சைவ உணவையும் புலால் உணவையும் உண்டு காமச்சேற்றிலே சிக்குவர். **சோற்றாசையோடு காமச்சேற்றாசைப் படுவோரை துணிந்து கொல்ல கூற்றாசை கொல்லும்.**

மாந்த நோயில் சிக்குண்ட குழந்தை எலும்பும் தோலுமாக படுத்தபடுக்கையாயிருந்து நகர முடியாத நிலையை அடையும். நாயானது எலும்பில் ஒட்டியிருக்கும் தசையை பல்லினால் இழுக்க (கரண்டுகின்ற) எலும்பின் கூர்மைப்பட்டு தன் நாக்கிலிருந்து வரும் இரத்தத்தை எலும்பிலிருந்து வருவதாக நினைத்து ஏமாறும். அது போல் தான் உடலிலிருந்து சத்துள்ளப்பொருளை வீணாக்கி மிகக்கேவலமான சிற்றின்பத்திற்கு (அற்பமகிழ்ச்சி) பலியாவர்கள். **நாவினை என்பால் வருந்தி கரண்டுகின்ற நாய்க்கு நகைத்தோன்ற நின்று நயக்குகின்றேன்.** கண்ணுங் கருத்துமாக காக்கும் உள்ஒளியை மங்கச்செய்து ஆயுளை குறைத்துக்கொள்ளும் செயலாகும்.

சொன்னெடு வானத்து அரம்பையர் எனினும் துரும்பு என காண்கின்றேன். வானலாவ புகழப்படும் (சொன்னெடு) மேனகை, ரம்பை, ஊர்வசி போன்ற மினுக்கும் பரத்தையர் தொடர்பு இரும்பில் துரும்பு பிடித்தது போல (எய்ட்ஸ் நோய் வரும்) ஆகவே தூசாக கருத வேண்டும். தன் மனைவியைத்தவிர மற்ற பெண்களை தாயாக சகோதரியாக பெண்ணாக கருதவேண்டும். உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும் உடமைகளும் உலகியலும் உற்ற துணையன்றே. உயிர்போகும் (உகுந்தருணம்) நேரத்தில் பெற்றவர்கள் சொத்துக்கள் மனைவி மக்கள் துணையாக இருக்க மாட்டார்கள், நமக்கு உற்ற துணையாயிருப்பது உள் ஒளியே.

பாடல் - 5

அச்சையும் உடம்பையும் அறிவகை அறியீர்
அம்மையும் அப்பனும் ஆர்எனத் தெரியீர்
பச்சையும் செம்மையும் கருமையும் கூடிப்
பலித்தநும் வாழ்க்கையில் பண்பு ஒன்று இல்லீர்
பிச்சையிட்டு உண்ணவும்பின்படுகின்றீர்
பின்படு தீமையில் முன் படுகின்றீர்
இச்சையில் கண்மூடி எச்சுக்கம் கண்டீர்
எத்துணை கொள்கின்றீர் பித்து உலகீரே

இச்சையை அளிப்பவர் இறையவரே

நாமெல்லாம் உயிரினங்கள் எல்லாருமே சிற்றுணுபசு சிறிய அணுவாகிய (பசு)ஆன்மா. இந்த ஆன்மா என்றும் அழிவதில்லை. இறந்து கொண்டும் பிறந்து கொண்டும் இருக்கும். தீவினை மிக்க ஆன்மாக்கள் பல ஆண்டு காலம் புழு உடல் கூட கிடைக்காமல் அலைந்துக் கொண்டிருக்கும். செருக்குமிக்கவன் இறந்தால் புழுவாகப்பிறக்கிறான். உலகத்திலுள்ள எந்த விஞ்ஞானிகளுக்கும் புரிந்து கொள்ள முடியாத விஷயங்கள் திருவருட்பா ஒன்றில் தான் காணமுடியும். இதைத்தான் அறிவகை அறியீர் என்கிறார் பெருமான்.

மனித குலத்திற்கு உயிரையும் (அச்சையும்) உடம்பையும் உள்ளத்தையும் தந்தவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவரே. இதனை சாதி சமய மதத்தைச் சார்ந்தவர் ஏற்க மறுத்து பல ஆயிரக்கணக்கான கற்பனை தெய்வங்களை வணங்குகின்றனர். இந்து தாய், முகம்மதிய தாய், கிருத்துவ தாய் போன்ற எந்த சமயத்தைச் சார்ந்த தாயாயிருந்தும் தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை ஆய்வுற காத்தருள் அருட்பெருஞ்ஜோதி இருளாக துர்நாற்றம் வீசுவதாக உள்ள தாய் கர்ப்பபையில் உள்ள கருவைக் கொல்ல புழுக்கள் துடிக்கும். அதைத்தடுத்து குழந்தை பிறக்க காரண மாயிருப்பது உள் ஒளியே (அருட்பெருஞ்ஜோதி) குழ்ந்தை பிறந்ததும் இந்து, முகம்மதியம், கிறித்துவம் என்ற பட்டத்தை சூட்டுகின்றனர்.

கண்ணுங்கருத்துமாக சாகும் வரை காத்துவருகிற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை எல்லா சமய மதத்தினரும் ஏற்க மறுக்கின்றனர். சமய மதத்தில் கொண்டுள்ள மூட நம்பிக்கையால், ஓர் ஆன்மா எந்த பிறவி எடுத்தாலும் எத்தனை பிறவி எடுத்தாலும் அவ்வான்மாவில் பரமான்வாயிருந்து இயக்குகிறார். கண்ணுங் கருத்துமாக காக்கின்றார். இதனை **எழுமையினும் விடாத நட்பே** என்பர். உயிரோடிருக்கும் போது ஒருவரை இலேசாக் தூக்கிவிடலாம். இறந்து விட்டால் (பரமான்மா வெளியேறல்) பிணத்தை தூக்க நான்குபேர் தேவைப்படுகின்றன. அம்மையுமாய் அப்பனுமாய் இருந்து தாங்குபவரும் அவரே.

வடலூர் சத்திய ஞானசபையில் பூசத்தன்று ஏழுவண்ணத்திரை (பச்சை, செம்மை, கருமை)களை நீக்கி ஜோதி தரிசனம் காண்பிக்கின்றனர். **சத்திய ஞானசபை என்னுள் கண்டனன் சன்மார்க்கசித்தியை (இறவா ஒளிநிலை) நான்பெற்றுக் கொண்டனன்.** நம்முள் ஆணவம், கன்மம், மாயைப்போன்ற தீய குணங்கள் நீங்க வேண்டும். இத்திரைகள் நீங்க (பலிக்க) சுத்த சன்மார்க்க மெய் நெறியை கடைப்பிடிக்க வேண்டும். தீய குணங்களை பழக்க வழக்கங்களை விட மறுக்கிறார்கள். (பண்பு ஒன்றில்லீர்)

மண் பெண், பொன் போன்றஉலக மாயையில் (கண்மூடி இச்சை) மயங்கி உடனடியாககிடைக்கும் அற்ப சுகத்திற்காக துன்மார்க்கவழி என்று தெரிந்தும் வாய்ப்பு கிடைக்கும் போது துணிந்து தீயகாரியங்களில் ஈடுபடுகின்றனர். பின்னால் சிறை தண்டனை போன்ற தொல்லைகள் துன்பங்கள் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றனர். **பின்படும் தீமையில் முன்படுகின்றனர்.** இவர்கள் புறவழி கற்பனை தெய்வங்களைநம்பி கண் மூடிஇச்சைகொள்கின்றனர். சமய மதங்கள் ஆச்சார சங்கற்பவிகற்பங்கள் வருணம் ஆசிரமம் முதலிய உலகாச்சார சங்கற்ப விகற்பங்கள் அபிஷேக

ஆராதனைகள் தாம் செய்யும் துன்மார்க்க செயலுக்கு பரிகாரமாகிவிடும் எனநம்பி ஏமாறுகின்றனர்.

எந்தவித ஆதாரமற்றவர்களுக்கு ஒருவன் தகுதிக்கேற்றவாறு பசித்தவிர்த்தலையே விரதமாக கொள்வானே ஆனால் அவனுக்கு வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும், சந்ததி இல்லை என்றால் சந்ததி கிடைக்கும். தீராத நோய் தீரும். பிச்சையிட்டு உண்பதற்கு பின்படுகின்றீர் (துயங்குவது) ஈகாதலுடையவருக்கே (கொடுக்கின்றவிருப் பமுடையவர்) இருநிதி (பெரும்நிதி) அளித்து இன்புறுகின்ற இறைவரே. இதுபோல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை பிரார்த்தித்து அவர் அருளை வேண்டி பிறருடைய துன்பங்களை அச்சங்களைப்போக்க தொண்டாற்ற முயல வேண்டும்.

இச்சையெல்லாம் எனக்கு அளித்தே எனைக்கலந்த தெய்வம்பற்றிய பற்றனைத்தையும் பற்றறவிட்டு அருள் அம்பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே. பெற்றோர், மனைவி, மக்கள், உற்றார்,உடமைகள், உலகியல் இவைகள் மீது அளவுகடந்த பற்றுவைத்திருப்பதை விட்டுவிட வேண்டும். இவைகளை தந்தவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். நம் சிற்றம்பலத்திலிருந்து (புருவமத்தி) அருள்கிற அவரிடம் இடைவிடாது அன்பு இச்சை கொள்ள வேண்டும். உகுந்தருணம் (உயிர்போகும் தருவாய்) உற்ற துணையாயிருப்பவர் தடுப்பவர் அவர் ஒருவரே.

பாடல் - 6

வட்டிமேல் வட்டி கொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத்து ஆள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக் கொண்டு ஒட்டியுள்ளிருந்தீர்
பட்டினிகிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சியாயினும் வழங்கவும் நினையீர்
எட்டிப்போல் வாழ்கின்றீர் கொட்டிப்போல் கிளைத்தீர
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

ஈவு இரக்கமற்றகஞ்சத்தனம்

(அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் மெய்யறிவு உருவானவர், மெய்ப்பொருள் என்றும் கூறுவர். அன்னிய மல்லாத தெய்வம், அறிவான தெய்வம், அவ்வறிவுக்கு அறிவான என் அன்பான தெய்வம். சென்னியில் (தலையில்) செம் பொருளாய் (இருதிரு வடிகள்) திகழ்கின்ற தெய்வம். இருதிருவடிகள் என்பது அருள் அறிவு, அருள் அனுபவம், மெய்பொருளை இடைவிடாது நினைத்து எச்செயலையும் செய்தாலும், திருவருட்பா பாடி மகிழ்வதுமே ஆண்டவர் அளித்த அளிக்கின்ற அருளுக்கு நன்றியாகும் (வட்டியாகும்) சிற்சபையின் கண் மனதை செலுத்துவதைத் தவிர மற்ற எந்தவித ஆபாசத்திலும் செலுத்தாது மனதை இழுத்து புருவமத்தியில் நிறுத்த வேண்டும். இடைவிடாது நினைத்தலாகும். அம்பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே. அருள் வட்டியை பெற்றுதருகிற மார்க்கமாகிய சன்மார்க்க சங்கத்தைச்சார வேண்டும்.

அசலா பணம் கொடுத்துவட்டி வாங்குவதோடு ஒரு மாதம் தவறினால் அவ்வட்டிக்கும்வட்டி வாங்குபவர்கள் துன்மார்க்க நெறியில் பணத்தைப் பெருக்கி பாவத்தை வளர்த்து கொள்கிறார்கள். பெட்டி பெட்டியாக பணம் சேர்த்து கொண்டே இருப்பார்கள். பத்திரமாக பெட்டியைப்பூட்டி பார்த்து இன்புறுவர். பங்சமாபாதகத்தில் ஈடுபட்டு சேர்ப்பவர் திருந்தமாட்டார்கள். பணப்பெட்டிகளை பாதுகாக்கும் ஆட்சியிலேயே கவனம் செலுத்துவர் எளிய உணவு உண்டு வயிற்று பெட்டியை நிரப்பி கொள்வார்கள். அறுசுவை உணவு உண்டால் அதிக செலவாகுமென அஞ்சி வீட்டுக்கு வெளியே வராமல் மூலையில் தொங்கிக்கொண்டிருக்கும் தூசுபோல (ஒட்டடை)ஒரு மூலையில் தூங்குவர்.

பசி எனும் தீச்சுவாலையில் சிக்கிதவிக்கும் ஒருவர்வீட்டுவாசற்படியில் நின்று பிச்சை போடுங்கள். என்று கேட்டால் தன்னிடம் உள்ள இரவு மீந்து போன பழைய சோற்றையாவது கொடுக்கலாம். வெளியேவந்து பார்த்தால் கொடுக்க நேரிடுமென நினைத்து உள்ளே இருந்து கொண்டு ஒன்றுமில்லை போ என துரத்திவிடுவார்கள். கொட்டி கிழங்கு போல பணம் பெருகினாலும் (கிளைத்தீர்) யாருக்கும் உதவாத நஞ்சுடைய எட்டிப்போல வாழ்கின்றனர்

மேலும் அவர்கள் பிறர் பொருளை பறிக்கவே விரும்புவர் என்பதை பெருமான் விளக்குகிறார். வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை மனை கவர் கருத்தினேன், ஒட்டைச் சட்டியே எனினும் பிறர்கொளத்தரியேன் தயவிலேன் சூதெலாம் அடைத்த பெட்டியே நிகர்த்த மனத்தினேன் என்கிறார் மேலும் ஈவு இரக்கமற்ற கஞ்சத்தனம் உடையவர் என்பதை விளக்குகிறார்.காசு தான் நம்மை காக்கும் கடவுள் எனக்கொண்டு கஞ்சத்தன வாழ்க்கை நடத்துபவர்கள் உண்டு. அவர்கள் பணத்தைப் பெருக்க வட்டிக்குவிட்டு நாய்போல் திரிந்து பாயும் புலி போல (பாய்பட்ட) உறமிமிரட்டி வசூல் செய்து ஒன்றை பத்தாக்க முயலுபவர்கள் இழிந்த மக்களே. அவர்களுக்கு பாழடைந்த குட்டிச்சுவரே வீடாகும். பலநாட்களாகப் பக்குவ படுத்தி (பண்பட்ட) சோறு வடித்த நீரை (கழுநீர்) வானுலக (விண்பட்ட) இன்னமுது தேவர்கள் அருந்தும் அமுதத்தைப்போல் பருகுவர்.

மேலும் (அன்றி) பலநாட்களுக்கு முன் முற்றியபுல்லில் கிடைக்கும் தானியமணிகளை பூவை வாடாமல் பாதுகாப்பது போல பத்திரமாக பாதுகாப்பார்கள். (போய்பட்ட புல்லுமணி) உரலில் நெல் உலக்கையில் குத்தும் போது அதன் பூணில் ஒட்டிய தவிட்டையும் ஒதுக்கப்பட வேண்டிய உமியையும் தங்கத்தைப் பாதுகாப்பது போல பாதுகாப்பர். ஈவு இரக்கமற்ற கஞ்சத்தன நிலையில் வாழ்வதே பெரும்போகம் என்பது அவர்கள் அறியாமையாகும் இத்தெளிவுரையைக்கூறும் பாடலை கவனிப்போம். பாய்ப்பட்ட புலியன்ன நாய்ப்பட்ட கயவர்தம் பாழ்பட்ட மனையில் நெடுநாள் பண்பட்ட கழுநீரும்

விண்பட்ட இன்னமுது பட்ட பாடாகும் அன்றி போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும் நற்பூண்பட்ட பாடு தவிடும் புண்பட்ட உமியும் உயர் பொன்பட்ட பாடு அவர்கள் போகமொரு போகமாமோ மேலும் கஞ்சத்தன முடையவர்கள் பணத்தை எப்படி இழக்கிறார்கள் என்பதைப பார்ப்போம்.

மழவுக்கும் ஒரு பிடி சோறு அளிப்பது
அன்றி இருபிடி ஊன்வழங்கில் இங்கே
உழவுக்கு முதல் குறையும் எனவளர்த்து
அங்கு அவற்றை எல்லாம் ஒகோபேயின்
விழாவுக்கும் புலால் உண்ணும் விருந்துக்கும்
மருந்துக்கும் மெலிந்து மாண்டார்
இழவுக்கும் இடர்க்கொடுங்கோல் இறை
வரிக்கும் கொடுத்து இழப்பர் என்னே என்னே

பணத்தை வட்டிக்கு விட்டு பெருக்கும் ஈவு இரக்கமற்ற கஞ்சத்தன முடையவர்கள் இருபிடிசோறு சாப்பிடும் தங்கள் குழந்தைக்கு வயிறார உணவு அளிக்க மாட்டார்கள். உழவு செய்வதற்கு விதை கூலி முதலியவற்றிற்கு வைத்திருக்கும் முதலீடு குறையுமென ஒரு பிடிசோறு ஊட்டி வளர்ப்பார்கள். இப்படி எல்லாம் சிக்கனப்படுத்தி முதலீடுசெய்த பணத்தை ஒன்றுக்கு பத்தாக பெருக்கி (வளர்த்தாங்கு) பெட்டி மேல் பெட்டிவைத்து பாதுகாக்கும் ஆட்சி செய்வார்கள்.

பணம் கொடுக்கல் வாங்கலில் சிலசமயம் சிக்கல் ஏற்பட்டு சங்கடங்கள் ஏற்பட்டு பிரமை பிடித்தவர்கள் போல ஆவார்கள். பேய் பிடித்துவிட்டதாக நம்பி (சிறுதெய்வ வழிபாடு) பேயின் விழா விறகு செலவிடுவர். புகை பிடித்தல் மது அருந்தல் பெண்களோடு கும்மாளம் போடுதல், மாமிச உணவு விருந்து நடத்தலென எல்லா துன்மார்க்க நிகழ்ச்சிகள் நடத்துவர் இவைகளால் உடல் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப் படுவார். பணமிக்கவர் என தெரிந்ததும் சில டாக்டர் நோயை வளரச்செய்து பணம் பறிப்பார். மருந்து

தருவார். மருந்தே ஆகாரமாகி உடல் நலிவுற்று (மெலிந்து) இறந்துவிடுவார். அதற்கான இழவுச்சடங்குகள் செய்ய பணத்தை செலவிடுவார்கள் மக்கள் வாழ்க்கைக்கு இடையூறு செய்கிற சர்வாதிகார அரசு விதிக்கிற (இறைவரி) வரிக்கும் பணத்தை இழப்பார்.

தாம் பெற்றெடுத்த குழந்தை அறிவு ஒழுக்கம், பக்தி, நல்ல பண்பு, சிறந்தபடிப்புடையவனாய் வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடையது. உணவு கொடுப்பதிலேயே சிக்கனப்படுத்தி சேர்க்கும் சொத்து வீணான பொருளாதார விரயத்துக்கு ஆட்படுகின்றனர், தானும் நன்றாக அனுபவிக்காது நல்லகாரியங்களைச் செய்யாது தீயவழியில் சம்பாதித்து வீணான செலவில் விரயமாகின்றன.

பாடல் - 7

வன்சொல்லின் அல்லது வாய்திறப்பறியீர்
வாய்மையும் தூய்மையும் காய்மையில் வளர்த்தீர்
முன்சொல்லுமாறொன்று பின் சொல்வதொன்றும்
மூட்டுகின்றீர் வினை மூட்டையைக்கட்டி
மன்சொல்லும் மார்க்கத்தை மறந்து துன்மார்க்க
வழிநடக்கின்றீர் அம்மரணத்தீர்ப்புக்கே
என் சொல்ல இருக்கின்றீர் பின்சொல்வதறியீர்
எத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே

இன்சொல்லால் இறைவன் அருள்பெறலாம்

பெறுதற்கரிய பிறப்பு மனிதப்பிறப்பு. உயர்ந்த பிறப்பு என்பர். பேசவும், படிக்கவும், சிந்திக்கவும் ஆற்றல்களைப் பெற்றதால். இந்த ஆற்றல்களைத் தந்து உடல், உள்ளம், உயிர்தந்து நம்புருவமத்தியிலிருந்து இயக்குகிறவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். இவர் இரக்கமே அன்பே வடிவானவர். உலகில் பணத்தால், படிப்பால், பதவியால் உயர்ந்தவர்கள் பலர் வாய்திறந்தவுடன் (ஆணவபேச்சை) வன்சொல்லைத் தான் பயன்படுத்துவார்கள்.இதுதான் தங்களுக்கு பெருமை என நினைக்கிறார்கள்.

மேலும் இவர்கள் பொறாமை (காய்மை) மிக்கவர்களாக, விளங்குகிறார்கள். சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டார்கள். (வாய்மையற்றவர்) பரிசுத்தமான உள்ளம் (தூய்மை) இல்லாததால் மனம் போனபடிநடப்பர்.

முதலில் ஒன்று சொல்லுவதும் பின்னால் அதையே மாற்றி சொல்லி கலக்கத்தை (மூட்டுதல) விளைவித்து ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும்படி செய்வர். வன்சொல் பேசுபவர் பின்னால் துன்பப்படும் தீவினைப் பயனை அடைவர் பகராத வன்மொழி பகருகின்றவர்கள் (பேசக்கூடாத கொடுஞ்சொல்லை பேசுபவர்கள் தான் பண்ணாத தீமைகளை பண்ணுவார்கள். (செய்வார்கள்) இரக்கமற்ற இவர்கள் வாழ்நாள் சுருங்கி இறப்பார். செருக்கு (ஆணவம்) அற்று நரகில் (மலத்தில்) சிறு புழுவாக (பிறந்து) திகைப்பார்கள். இம்மரணத்தீர்ப்பைத்தான் (பின் சொல்வதறியீர்) என்கிறார் பெருமான்.

நயத்தால் உனது திருவருளை
நண்ணாக் கொடியேன் நாயுடம்பை
உயத்தான் வையேன் மடிந்திடுவேன்
மடிந்தால் பின்னர் உலகத்தே
வயத்தால் எந்த உடம்புறுமோ
என்னவருமோ என்கின்ற
பயத்தால் ஐயோ இவ்வுடம்பைச்
சுமக்கின்றேன் எம்பரஞ்சுடரே

ஆன்மா அழிவதில்லை இறந்து கொண்டும் பிறந்து கொண்டும் இருக்கின்றன. மனித உடல் பெற்ற ஆன்மா, கடைத்தேற (உய்ய) நித்திய வாழ்வுப் பெற முயலவில்லை. பணம், படிப்பு, பதவி போன்றவைகளில் உயர்ந்து விட்டால் சிலர் ஆணவ பேச்சையே அதிகார பேச்சையே விரும்புகின்றனர். நாய்போல் அலையும் உடலையும், குரங்கு போல் தாவும் மனதையும் பெறுகின்றனர். அகத்தே இருந்து இயக்கும் பரமான்மாவின் திருவருளைப்பெற உயிர் இரக்கம், இன்சொல் மூலம் (நயத்தால்) நெருங்குதல் (நண்ணுதல்)

வேண்டும். மனிதன் ஒருவன் தான் பெற்றுவிட்ட மனித உடலை ஒளி உடல் (நித்திய உடல்) ஆக்க, கடைத்தேற்ற (உய்விக்க) முடியும்.

உலக மாயையில் சிக்கிய ஒருவர், உய்வதற்கு முயற்சி செய்யாததால் ஊழ்வினை வசத்தால் (வயத்தால்) பல தொல்லைகளுக்கு ஆளாகி இறக்க நினைக்கிறார். இறந்தால் **எந்த உடம்பு வருமோ (உறுமோ) என்ன நிலை வருமோ** என்ற பயத்தால் தற்கொலை செய்து கொள்ளாது உடலை ஒரு சுமையாகக் கருதி மனம்போன போக்கில் வாழ்கிறார்கள். பரஞ்சுடர் தான் நம்மை சுமக்கிறது என அறியார்.

தாயாகி தந்தையுமாய் (உடலை) தாங்குகின்ற தெய்வம் அருட்ஜோதி தெய்வம் என்கிற சன்மார்க்க படிப்பை படிக்காதவர். துயின்று (தூங்கி) உணர்ந்தே எழுந்தவர் போல இறந்தவர்களெல்லாம் (சன்மார்க்கிகள்) தோன்ற எழுகின்றது. (உடனே மீண்டும் மனிதபிறப்பு) இது தொடங்கி (1865ல் சன்மார்க்கம் தோன்றியது) நிகழ்ந்திடும் பயின்று அறிய விரைந்துவம்மின் படியாதப்படிப்பை படித்திடலாம். (சாகாக்கலை திருவருட்பா) உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே (பேரின்ப பெருவாழ்வு) பெருந்தவசி கல்பட்டு ஐயா இருபத்தைந்து ஆண்டுகாலம் தருமச்சாலையில் கஞ்சி ஊற்றும் தொண்டு செய்து இறந்து சாமாதியும் உள்ளது. இன்று அவர் சன்மார்க்க தொண்டை (உடனே மனிதப்பிறப்பை பெற்று) செய்து கொண்டிருக்கிறார் என்பது இதன் மூலம் உணர்கிறோம்.

நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதிகாரக்கேடரை
பொய்யலால் கிளத்தாப்
படுநிலை அவரைப் பார்த்த போதெல்லாம்
பயந்தனன் சுத்த சன்மார்க்க
விடுநிலை உலக நடை எல்லாம் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்

பொது உணர்வு சத்தியம், நீதியில்லா (நடுநிலை) கும்பலை ஈவு இரக்கமற்ற கொடுங்கோல் அரசை (கருணை நண்ணிடா அரையரை அரசரை) வாங்கும் வரியை சட்டப்படி திட்டப்படியின்றி வீண் செலவு செய்யும் தீயவரை **நாளும் கெடுநிலை நினைக்கும் சிற்றதிகார கேடரை** பொய்யைத் தவிர வேறொன்றையும் சொல்லாத போலி அரசியல் வாதிகளை (பொய்யலால் கிளத்தாபடுநிலை அவரை) பார்த்த போதெல்லாம் பயந்தனன் வேண்டியவர்கள் தவறு செய்தால் தண்டிக்க வேண்டிய சட்டம் வளைந்து கொடுத்து பாதுகாப்பு அளிக்கும். அதே தப்பை சாதாரணமானவர்கள் செய்தால் தண்டிக்கப்படுவார். நீதி நேர்மையற்ற கொடுங்கோல் ஆட்சியாகும். இதுபோன்று துன்மார்க்க வழிநடந்தால் மரணத்தீர்ப்பு கிடைக்கும் என்பதை உணராதவர்கள், இவர்கள் திருந்த சன்மார்க்கத்தைச்சார வேண்டும்.

இன்னே செய்யுடை என்னோடு கூடி ஆட எழுந்தருளுவாய். இன்சொல் உடையவரே இனிய நல்ல காரியங்களைச் செய்யும் சன்மார்க்கிகள் அவர்களிடம் தான் ஆண்டவர் பிரகாசிப்பார். உலக உயிர்களுக்கும் மனித குலத்திற்கும் ஆண்டவர் அருட்பெருஞ்ஜோதி ஒன்றே ஆகும். ஆகவே மனிதகுலம் சாதிசமயமத இனம், நாடு, மொழி போன்ற எந்தவித பேதமற்று ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ வேண்டும். எல்லா உயிர்களிலும் உள்ஒளியாக ஆண்டவர் இருப்பதால் புலை கொலை தவிர்த்து ஜீவகாருண்ய ஒழுக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். சமய மதம் கூறும் மூடப்பழக்க வழக்கங்களை கற்பனை தெய்வங்களை நம்பி அபிஷேக ஆராதனைகளைச் செய்வதன் மூலம் நம் பாவகாரியங்களுக்கு பரிகாரமாகிவிடும் என்பது ஏமாற்றமே. மரணம் வரும், கீழ்த்தரமான பிறவி கிடைக்கும்.

மன்சொல்லும்மார்க்கம் (நித்திய வாழ்வை தருவது) என்பது சன்மார்க்கம். உள்ளதை உள்ளபடி அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் வள்ளற்பெருமானுக்கு உணர்த்தியது தான் திருவருட்பா. மெய்ப்பொருள் உணர்ந்து

மெய்நெறியைக் கடைப்பிடிக்க சன்மார்க்க சங்கத்தை சாரவாரீர் சாவையும் பிறப்பையும், தவிர்க்க வாரீர் என அழைக்கிறார் பெருமான் **கண்ணாககாக்கின்ற கருத்தனை நினைந்தே கண்ணாரநீர் விட்டு கருதறியீரே** இன்சொல் மூலம் இறைவன் அருளைப்பெறலாம் என்கிறார் பெருமான்.

பாடல் - 8

துன்மார்க்க நடையிடை தூங்குகின்றீரே
தூக்கத்தை விடுகின்ற துணை ஒன்றும் கருதீர்
சன்மார்க்க சங்கத்தை சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையும் தவிர்த்திட விரும்பீர்
பன்மார்க்கம் செல்கின்ற படிற்றுளம் அடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்து உணவளியீர்
என் மார்க்கம் எச்சுகம் யாது நும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

சன்மார்க்கமும் துன்மார்க்கமும்

ஒருவன் பணம் இருந்தால்தான் உலகில் வாழமுடியும் என அலைகின்ற மனத்தோடு (படிற்றுளம்) நீதி நேர்மையற்ற வழியில் எந்தவித குறிக்கோளுமின்றி பலதுன்மார்க்க வழியில் (பன் மார்க்கம்) பெரும்பொருள் அளவிற்குமீறி சம்பாதித்துவிட்டான். பிச்சைக்காரன் பசியால் தவித்து ஆகாரம் கேட்டாலும் இருந்தும் கொடுக்க மனமில்லாத கஞ்சத்தன முடையவன். **பசித்தவர்தம் முகம் பார்த்து உண்வளியீர்.** தன் சொத்துக்களை அனுபவிக்க குழந்தை இல்லையே என்ற ஏக்கம். சமய மதங்கள் குறிப்பிடும் பலவிதமான தெய்வங்களுக்கு (பன்மார்க்கம்) அபிஷேக ஆராதனைகள் செய்தால் குழந்தையும் பிறக்கும். இதுவரை தாம் செய்த தீவினைகளுக்கு (துன்மார்க்கச் செயல்) பரிகாரமாகிவிடும் என்று தன் தகுதிக்கேற்றவாறு பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து அபிஷேக ஆராதனை வழிபாடுகள் செய்தான். (ஆண் குழந்தை ஒன்று பிறந்தது அக்குழந்தைக்கு துன்பம் என்பது தெரியக்கூடாது என்ற நிலையில் வளர்த்தான். பள்ளிக்கூடம் போவற்கு ஆர்வம்

இல்லாமல் இருந்ததால் நல்ல கல்வி அறிவு பெறவில்லை நல்லவர்களுடன் நட்புக் கொள்ள முடியவில்லை ஊழ்வினைப்பயனாக பெற்றோர்கள் நோய்வாய்பட்டனர். சின்னவயதிலேயே திருமணம் செய்து விட்டார்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலமாக வாழ்ந்தான். ஒழுக்கமற்ற பெண்களின் மாயையில் சிக்கினான் சிற்றின்ப வேட்கையில் மூழ்கியதால் உடன் நலிவுற்று வலிவு இழந்தான்.

இதனை ஈடுகட்ட நாள் தவறாது புலால் உணவை உண்டான் உடலில் (புலை) துர்நாற்றம் வீசியதை மறைக்க சிகரெட் பழக்கங்கொண்டான். திட்டமிட்ட வாழ்க்கையில் ஈடுபடாததால் தொல்லைகள் துன்பங்கள் பெருகின. வேதனைகளை மறைக்க அளவிற்கு மீறி மது அருந்தி தன்னிலை மறந்து தூங்கினான். உழைத்து சம்பாதிக் காததாலும் துன்மார்க்க பழக்கத்தாலும் சொத்துக்களை விற்கும் நிலை ஏற்பட்டு வேதனைப்பட்டான். சாவதற்கும் துணிந்துவிட்டான்.

சன்மார்க்க சங்கத்தை சார்ந்திட விழையீர் சாவையும் பிறப்பையும் தவிர்த்திட விரும்பீர் எறும்பு முதல் (யானை) மனிதன் வரை சிற்றுணு பசு (சிறிய அணுவாகிய ஆன்மா) பிறந்து கொண்டும் இறந்து கொண்டிருக்கும். உலகத்திலேயே வள்ளற்பெருமான் ஒருவர் தான் 1874ல் ஊன்உடலை ஒளி உடலாக (நித்திய உடல்) பெற்று இன்றும் சன்மார்க்க கொள்கைகளை பரப்பிக் கொண்டிருக்கிறார். நாமும் மனித இனம் தான். இறவாமை பெறமுடியும். நாம் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து வழிபாட்டில் கலந்து கொண்டு திருவருட்பா ஓதவேண்டும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இடைவிடாது ஓத வேண்டும்.இதுவே தியானம். நம் ஆன்மாவில் சிற்றம்பலத்தில் (சித்து+ அம்பலம்) அறிவு விளங்குமிடம்) புருவ மத்தியில் பரமான்மா (உள் ஒளி அருட்பெருஞ்ஜோதி) இருந்து நம்மை தாங்கி கொண்டிருக்கிறது. நம்மை இயக்கி காப்பாற்றுகிறது. பரமான்மா வெளியேறிவிட்டால் உடல் பிணமாகிவிடும். **தப்பாலே உலகத்தவர் சாவே துணிந்தார்** மூடப்பழக்க

வழக்கங்களால். அறியாமையால், பொருளாசையால் தவறு செய்கிறார்கள். ஆணவம், காமம், கோபம், கஞ்சத்தனம் போன்ற தீய குணங்களால் மாமிசம், மது, விலைமாதர் தொடர்பு, சிகரெட் பிடித்தல் போன்ற தீய பழக்கங்களால் இறக்கின்றனர்.

எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க நினைக்க வேண்டும். பசித்தவிர்த்தல் போன்ற உபகார காரியங்களை செய்ய வேண்டும். இரக்கம் அன்பு கொண்டு தான் இறைவன் திருவருளைப் பெறமுடியும்.

தாய் கருப்பையில் தங்கிய உயிர்களை ஆய்வுற காத்தருள் அருட்பெருஞ்ஜோதி புழுக்கள் கர்ப்பபையில் கருவை கொல்ல முயற்சிக்கும் அங்கு காப்பாற்றுவது உள்ஒளி தான். **கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைத்து கண்ணார நீர் விட்டு கருதறியீரே.**

ஒரு குழந்தை பலூனை கேட்கும். வாங்கி கொடுக்காவிட்டால் ஆகாரம் சாப்பிடாது, அழுது கொண்டே இருக்கும். பலூன் கிடைத்ததும் அழுவதை நிறுத்தி சாப்பிடும். **ஆண்டவர் திருவருளை உண்மையாகப் பெற விரும்பினால் அழுதக் கண்ணீர் மாறுமா ஆகாரத்தில் இச்சைச்செல்லுமா** என்ற நிலையில் கண்ணாக காக்கின்ற கருத்தனை நினைத்து கண்ணீர்விட்டு வேண்டினால் திருவருளைப் பெற்று உய்யலாம்.

பாடல் 9

பொய் கட்டிக் கொண்டு நீர் வாழ்கின்றீர்
புலைக்கட்டிக்கொண்ட இப்பொய் உடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
சிறு புழுவாகி திகைத்திடல் அறியீர்
கை கட்டி வாய் பொத்தி நிற்பவரைக்கண்டே
கைக்கொட்டி சிரிக்கின்றீர் கருணை ஒன்றில்லீர்
எய் கட்டியிடை மொய்க்கும் ஈயினும் சிறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

ஆணவத்தோடு வாழ்ந்தால் தண்டனை அற்பபுழு

கைக்கட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே கைக்கொட்டி சிரிக்கின்றீர் கருணை ஒன்றில்வீர். கருணையின்றி சிரிப்பவன் இரக்கமற்றவன். வட்டியை பெருக்கிக் கொட்டியே ஏழை மனைக்கவர் (வீடுகளை பறித்தல்) கருத்துடைய பணக்காரன் இரக்கம், அன்பு சிறிதும் இல்லாத அவன் முன் ஓர் ஏழை கைக்கட்டி வாய்பொத்தி நின்று தன் வறுமையைக் கூறி கடன் கேட்கிறான். ஏற்கெனவே வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் மேலும் பணம் கேட்கிறான். பரிதாபப் படவேண்டிய பணக்காரன் சிரிக்கிறான். நான் இதுவரை கொடுத்த கடனுக்கு உன் வீடு ஈடாகாது என்று சொல்லி வீட்டைத் தன்பேரில் எழுதிக்கொண்டு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுகிறான்.

எய்கட்டியிடை மொய்க்கும் ஈயினும் சிறியீர் எருது நோவு அறியா காகம் போன்றவரே. ஓர் எருதிற்கு உடலில் புண் ஏற்பட்டு (எய்கட்டி) சீழும் இரத்தமாக ஒழுகி வலி தாங்காமல் துன்பப்பட்டு கொண்டிருக்கும். இதனைப் பார்த்த காகம் ஒன்று அப்புண்ணை தன் அலகால் மேலும் மேலும் குத்தி ஒழுகும் சீழ், இரத்தம், பூச்சிகளை அருந்தும். மேலும் அப்புண்ணை ஈக்கள் மொய்த்து கொண்டு ஊசியில் குத்துவதைப் போல துன்புறுத்தும் இரக்கமற்ற அக்கஞ்சன் ஈயைவிட காக்கையை விட கேவலமானவன்.

எல்லாம் செய் வல்ல தெய்வம் எங்கும் நிறை தெய்வம் என்னுயிரில் கலந்து எனக்கே இன்பம் நல்கும் தெய்வம். (அருட்பெருஞ்ஜோதி உள்ஒளி ஒன்றே) இரக்கமும் அன்பும் கொண்டு உள்ஒளியின் திருவருளைப் பெற்று இன்றும் உலகெங்கும் சன்மார்க்கம் பரப்பிக் கொண்டிருக்கிறேன். இதுவரை தோன்றியவர்கள் ஒருவரும் என்போல் இப்பேற்றினை பெறவில்லை என்கிறார் பெருமான். திருவருள் பெற முயலுங்கள் என்று நமக்கு அறிவுறுத்துகிறார்.

உலகத்தில் பணமில்லை என்றால் வாழ முடியாது என நினைத்து அக்கஞ்சன் செருக்கோடு செய்ய தகாத தீமைகளைச் செய்து பெட்டி பெட்டியாக பணங்களைச் சேர்த்துக் கொண்டே இருப்பான். இதன் பயனாக தொல்லைகள், துன்பங்கள், நோய், பயம், போன்றவைகள் தொடருகின்றன. சமய மதங்களில் கூறப்படும் பொய்யான கற்பனையான பலவிதமான கடவுள்களை நம்புகிறான். அக்கடவுளுக்கு ஆயிரக்கணக்கில் ரூபா செலவு செய்து அபிஷேக ஆராதனைகளைச் செய்தால் தான் செய்த பாவகாரியங்களுக்கு பரிகாரம் கிடைக்கும் எனநம்பி அக்குருமார்களிடம் பணம் கொடுத்தும் பலன் கிடைக்காமல் ஏமாறுகிறான். இதனைத்தான் பொய் கட்டிக்கொண்டு நீர் வாழ்கின்றீர் என்றார்.

செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில் சிறுபுழுவாகி திகைத்திடல் அறியீர் புலைக்கட்டிக் கொண்ட இப்பொய் உடல் வீழ்ந்தால் துர்நாற்றம் வீசும் உயிர்களைக் (புலைக்கட்டிகொண்ட) கொன்று தின்று இப்புலை உடலை, பொய் உடலை வளர்க்க கவலைப்படுகிறான் நிலையான உயிரைத்தர காத்திருக்கும் உள் ஒளியை மறந்ததால் இறக்கிறான். (பொய் உடல் வீழ்ந்தால்) கை மாறும் பொருளை நம்பியே நிலைத்த வாழ்வைத் தரும் திருவருளைப்பெற முயலவில்லை. ஆணவத்தால் (செருக்கால்) செய்த தீவினையின் பயனாக மலத்தில் (நரகில்) புழுக்கும் புழுவாகபிறக்கிறான். அவ்வான்மா செய்த தீவினைக்கேற்ப அப்புழு உடல் கிடைக்க பல ஆண்டுகள் பல மாதங்கள் அலையும் (திகைக்கும்) என்கிறார் பெருமான். சன்மார்க்கி இறந்தால் தூங்கி எழுந்திருப்பதைப்போல உடனே மனிதப்பிறவி பெற்று மரண மிலா பெருவாழ்வு பெற முயலுவான். ஆணவ மற்று வாழ்வது எப்படி என்பதை உணர்த்தும் பாடலைக் காண்போம்

உடுப்பவனும் உண்பவனும் நானே என்னவும் நாணம் உறுவது எந்தாய் தடுப்பவனும் தடைத்தீர்த்து கொடுப்பவனும் பிறப்பிறப்பு தன்னை நீக்கி எடுப்பவனும் காப்பவனும் இன்ப அனுபவ

உருவாய் என்னுள் ஓங்கி அடுப்பவனும் நீ என்றால் அந்தோ இச்சிறியேனால் ஆவதென்னே.

இன்ப அனுபவ உருவாய் என்னுள் ஓங்கி அடுப்பவன். 1874ல் வள்ளற் பெருமான் ஒளி உடலைப் பெற்று இன்றும் சன்மார்க்க கொள்கைகளை உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறார். அருட்பெருங்ஜோதிஆண்டவர் ஐந்தொழில் செய்யும் ஆற்றலை இறை அனுபவத்தை அவருக்கு மட்டுமே அளித்துள்ளார். உலக மக்கள் உய்ய வேண்டும் என்பதற்காக இரவும் பகலுமாக அழுது அழுது பாடிய பாடல்களே திருவருட்பா. அதன் பரிசு தான்இறை அனுபவம் **கண்ணாக காக்கின்ற கருத்தனை நினைந்து. கண்ணார நீர்விட்டு கருதறியீரே** அந்த அருள் (உள்ஒளி) எல்லா மனிதர்களிடமும் பதிந்துள்ளது (அடுப்பவன்) கருவிலிருந்து கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றிக்கொண்டு இயக்கிக்கொண்டிருக்கிறார்.

ஒவ்வொருவரும் தன்னுள் உள்ள திருச்சிற்றம்பல ஜோதியை இடைவிடாது நினைத்தே செய்தல் வேண்டும். துன்பம் வரும் போது துக்கக் கண்ணீர் விட்டு இறைவனிடம் முறையிடுதல் போல இன்பம் ஏற்படும் போது இறைவன் பெருமையை எண்ணி இன்ப கண்ணீர் விட்டு மகிழ பழக வேண்டும். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து ஆன்ம நேயத்தோடு உயிர் நலப்பணி புரிய வேண்டும். திருவருளை பெற்று தரும் திருவருட்பாவை இடைவிடாது ஓதி மெய்ப்பொருளை உணர வேண்டும். பாடி மகிழ வேண்டும் இதுவே இறைவனை இடைவிடாது நினைத்து அன்பு செலுத்துவதாகும்.

ஒருவன் பக்கத்து ஊரிலுள்ள நண்பனை பார்க்க திருச்சிற்றம்பல ஜோதியை நினைத்துக் கொண்டே பஸ் நிற்கும் செட்டி (Shed) ற்குள் நுழைந்தான். தான் ஏற வேண்டிய பஸ் புறப்பட்டு செல்வதால் அதிர் ஏற இவனால் முடியவில்லை தடை ஏற்பட்டு விட்டது. ஏதோ இறைவன் செயல் என மனதை தேற்றிக் கொண்டான். பக்க வாட்டிலிருந்த ஒரு விசும் பலகை (Bench) யில் உட்கார்ந்தான். அங்கிருந்த ஒரு

டீக்கடையில் பார்க்க வேண்டிய நண்பர் டீ குடிப்பதை கண்டு மகிழ்ந்து நேரிடை தொடர்பு கொண்டான். இறைவன் தடை தீர்த்து கொடுத்தார் என்பதை உணர்ந்து மகிழ்ந்தான்.

ஒருவன் ஆணவத்தால் செய்யதகாத வைகளை செய்தால் மலத்தில் புழுவாக பிறக்க வேண்டிய நியதியை விதியை பல ஆண்டுகளுக்குப் பிறகு உணருகிறான். தம்முள் உள்ள திருச்சிற்றம்பல ஜோதியை நினைத்து இரவும் பகலுமாக கண்ணீர் விட்டு அழுதான். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து மெய்நெறியினை கடைப்பிடித்து திருந்தினான். உயிர்நலப்பணிகளுக்கு தன் சொத்தையே தானமாகத்தந்து தொண்டு செய்ய ஆரம்பித்தான். நரகில் புழுவாக பிறக்க வேண்டிய விதியை நீக்கி மனிதனாக பிறக்கசெய்து நம்மை இயக்குவார் ஆண்டவர் என்று முழுநம்பிக்கையுடன். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தான் பிறப்பிறப்பு தன்னை நீக்கி எடுப்பவனும் காப்பவனும் உள்ஒளியே வீடுநிறைய அரிசி மூட்டைகளிருந்தும் பெட்டி நிறைய ஆடைகள் இருந்தும் அனுபவிக்க முடியாமல் படுத்தபடுக்கையில் இருக்கும் பணக்காரர்களும் உண்டு நானே என்று சொல்ல வெட்கப்பட்டு அவன் திருவருளால் தான் நடக்கிறது எல்லாம் என உணர்ந்து இடைவிடாது இறைவனை நினைக்க வேண்டும் நினைக்க நினைக்க ஆணவம் அடியோடு மறைந்துவிடும். தான் அலாது இறையும் உயிர்க்கு அசைவிலா தலைவனே சிற்றம்பலத்தே நம் புருவமத்தியில் உள்ஒளி (பரமான்மா) இல்லை என்றால் நம் (ஆன்மாவும்) உயிரும் உடலும் சிறிதுகூட அசையாது.

பாடல் - 10

பண்ணாத தீமைகள் பண்ணுகின்றீரே பகராத
வன்மொழி பகருகின்றீரே
நண்ணாத தீயினம் நண்ணுகின்றீரே நடவாத
நடத்தைகள் நடக்க வந்தீரே
கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே
கண்ணார நீர்விட்டு கருத அறியீரே
எண்ணாதது எண்ணவும் நேரும் ஓர்காலம்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

கண்ணார நீர்விட்டு கருதுக

உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும் உடமைகளும் உலகியலும் உற்ற துணை அன்றே சாகுந்தருவாயில் சாவை தடுத்து நிறுத்த பெற்ற தாய்தந்தையாலோ, உறவினர்களாலோ நண்பர்களாலோ சொத்துகளாலோ நாட்டை ஆள்பவர்களாலோ யாராலும் முடியாது. இளமை எல்லாம் போய் ஏதும் செய்யமுடியாத நிலையிலுள்ள முதுமையில் நினைக்கக்கூடாத தெல்லாம் நினைத்து வேதனைப்படக்கூடிய நிலை ஏற்படும். வஞ்சக மனத்தோடு மனம்போன போக்கில் வாழ்ந்தோமே என நினைக்ககூடிய நேரம் வரும் **எண்ணாதது எண்ணவும் நேரும் ஓர் காலம்.**

பணம், படிப்பு, பட்டம், பதவி, அரசியல் போன்ற வைகளில் உயர்ந்தவர்கள் தேவைகளைப் பெருக்கிகொண்டு ஆடம்பர வாழ்வு வாழ எதையும் செய்வார்கள். வறுமையில் சிக்கியவர்கள் தங்கள் பசியைப்போக்க வேலை இல்லாததால் தவறான காரியங்களில் ஈடுபடுகின்றனர். சட்டத்திற்கு புறம்பாக தவறு செய்ததால் போலீசாரிடம் சிக்கி தண்டனைக்குள்ளாகிறார்கள். வசதி படைத்தவர்கள் தங்கள் செல்வாக்கால் தண்டனையிலிருந்து தப்பி கொள்கின்றனர்.

செய்யக்கூடாத (பண்ணாத) தீய காரியங்களை செய்கின்றனர். பேசக்கூடாத (பகராத) வன்மொழி கொடுமையான வார்த்தைகளை பேசுகின்றனர்.

பாவகாரியங்களில் ஈடுபடுகின்றனர். விஞ்ஞான சாதனங்கள் கொண்டு இயற்கைக்கு விரோதமாக (நடவாத நடத்தைகள்) நடந்து பணத்தை பெருக்கமுயல்வார்கள்.

திருச்சிற்றம்பல ஜோதி நம் புருவமத்தியிலிருந்து கொண்டு கண்ணை இமை காப்பது போல இரவும் பகலுமாக கண்ணுங்கருத்துமாக காக்கின்றார். நமக்கு உடல்பொருள் ஆவி கொடுத்து நம் உடலை தாங்கிக்கொண்டு இயக்கிக் கொண்டு மெய்ஞான அறிவையும் அளிக்கிறார். இவரை இடைவிடாது நினைத்து எதையும் செய்யவேண்டும். துன்பம் ஏற்படும் போது கண்ணீர்விட்டு அழுது முறையிட வேண்டும். இன்பம் ஏற்படும்போது ஆனந்தகண்ணீர்விட்டு பாடிமகிழ வேண்டும். உலகமக்கள் உயர்வதற்கு இரவும் பகலுமாக அழுது அழுது பாடிய பாடல்களே திருவருட்பா. நாம் அதனைப்பாடி பாடி அழ வேண்டும். இதுவே ஆண்டவர் திருவருளைப்பெறும் உபாயமாகும்.

செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்திரு : நடஞ்செய் பெருங்கருணைத்திறத்தான் அங்கவனை ; மெய்தாவ நினைத்திடுக சமரசன் மார்க்கம் மேவுகஎன்று ; உரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான் வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன் ; மனங்கோணேன் மானம் எலாம் போன வழிவிடுத்தேன் ; பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே ; புகல்கின்றேன் நீவிர் எலாம் புனித முறும் பொருட்டே

உலக மக்களே (மேதினியீர்) நீங்கள் மேதகு நிலையில் மாண்புமிகு நிலையில் (மேதினியீர்) வாழ வேண்டுமானால் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து புனித முடையவராக மாற வேண்டும். இதுவரை நீங்கள் செய்த துன்மார்க்க பேச்சுகளை பாவ செயல்களை மன்னிக்ககூடிய கடவுள் உன் புருவமத்தியிலிருந்து இயக்குகிறார். அவர் திருவருளைப்பெற வேண்டுமானால் சன்மார்க்க சங்கத்தைச் சார வேண்டும் (மேவுக)

சமய மதத்தினர் கூறும் நூற்றுக்கணக்கான கற்பனை கடவுள்களை நம்பி ஏமாறாதீர்கள். ஜீவகாருண்யமின்றி மாமிச உணவுகளை உண்ணுதல். மது அருந்துதல் லாகிரிவஸ்துகளை (சிகரெட்) பயன்படுத்தல் விலை மாதர்களுடன் தொடர்பு கொள்ளல் போன்ற சன்மார்க்க

கொள்கைளுக்கு விரோதமான காரியங்களை செய்தாலும் பரவாயில்லை. ஈவு இரக்கமற்ற நிலையில் நீதி நேர்மையற்ற முறையில் பணத்தை பெருக்கினாலும் பரவாயில்லை என்கிறார்கள். நூறு ரூபாயிலிருந்து பல லட்சகணக்கான ரூபாய் வரை அந்த அந்த நிலைக்கேற்ப அபிஷேக ஆராதனைகளைப் போன்ற சடங்குகள் செய்து விட்டால் செய்யும் பாவகாரியங்கஞ்க்கு பரிகாரமாகிவிடும் என எண்ணி ஏமாந்து மேலும் மேலும் தவறுகளைச்செய்து கொண்டே இருக்கிறார்கள்.

இதனை சொல்வதால் என்னை திட்டினாலும் (வைதல்) திட்டுங்கள். நீங்கள் போற்றி புகழ்வதாக (வாழ்த்துதல்) கருதுவேன். மனம் சஞ்சல படமாட்டேன் (கோணேன்) அவமானம் ஏற்பட்டாலும் பேரும்புகழுக்குகளங்கம் ஏற்பட்டாலும் கவலைப்படமாட்டேன். (மானம் எலாம் போன வழிவிடுத்தேன்) உலகத்திலுள்ள மனிதகுலம் துன்மார்க்க செயல்களால் புழுக்குலமாக மாறாது புனித குலமாக திகழ வேண்டும் என்ற குறிக்கோளோடு தெரிவிக்கிறேன். கடுகளவுக் கூட கற்பனையாகவோ பொய்யாகவோ கூறவில்லை. கடவுள் எனக்கு உணர்த்திய சத்திய வார்த்தைகளை உள்ளதை உள்ளபடியே கூறுகிறேன். என்கிறார் பெருமான்.

சன்மார்க்க சங்கத்தை சார்ந்து மெய்ந்நெறி கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும். அகல்விளக்கேற்றி தீப முன்னிலையில் ஆண்டவர் விளங்குவதாக பாவித்து திருவருட்பா .பாராயணம் செய்ய வேண்டும். இதுவரை அவரவர் செய்த துன்மார்க்க செயல்களை அவர்களே உணர்ந்து திருந்த வெண்டும். எல்லா உயிர்களிலும் உள்ஒளி (ஆண்டவர்) இருப்பதால் எந்த உயிர்களுக்கும் தீங்கு செய்யக்கூடாது பசித்தவிர்த்தல் போன்றவைகளை உயிர்நலத் தொண்டுகளை செய்யும்போது நாமும் சீரும்சிறப்போடு வாழ்ந்து இன்புறலாம், எவ்வுலகமும் ஏத்திட வாழ்ந்திடலாம் எல்லாம் செய்வல்ல சித்தி இறைமையும் (சாவநிலை) பெற்றிடலாம்.

நமது தந்தை வருதருணம்

பாடல் - 1

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே

நீதியும் சத்தியமும் நிலை நாட்டுக

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே சாதி என்பது செய்யும் தொழிலை அடிப்படையாக கொண்டு தச்சர், வண்ணார், புரோகிதர் என்று ஏற்பட்டன. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் (ஆதியிலே) ஏற்பட்டன. அதன் மீது விருப்பம் கொண்டு (அபிமானித்து) வீணே பேதங்களை வளர்த்து சண்டையிட்டு மடிகின்றனர் இன்றும். சமயத்தின் கொள்கையே மதங்கள். தெய்வத்தின் பெயரால் ஏற்பட்டன. **தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும் சேர்கதி பலபல செப்புகின்றாரும் பொய் வந்த கலைபல புகன்றிடுவாரும் பொய் சமயாதியை மெச்சுகின்றாரும் வீண் கழிக்கின்றனர்.** கல்லில் செம்பில் கற்பனை சிலைகளை வடிவமைத்து புறவழிபாடுகளை செய்வார்கள். மனம் போன போக்கில் தெய்வங்களுக்கு பெயரிட்டு போற்றி வழிபடுவார்கள். கடவுள் பெயரால் மூடப்பழக்க வழக்க நம்பிக்கைகளை உண்டாக்குவதற்கு சுவர்க்க ஆசைகாட்டி நரக அச்சத்தை உண்டாக்குவர் (சேர்கதி)

வேத நெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள் விளம்பும் நெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும் ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி

உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே ஏதமற உணர்ந்தனன். வீண் போது கழிப்பதற்கு ஓர் எள்ளளவும் எண்ணமிலேன். வேதாகமம் சூதாக சொன்னவையலால் உண்மை வெளித்தோன்ற உரைத்தலிலை என்ன பயனோ இவை. சமய மதங்களின் ஆச்சார சங்கற்வப விகற்பங்களும் வருணம், ஆசிரமம் முதலிய உலகாச்சார சங்கற்ப விகற்பங்களும் ஏற்பட்டன ஆகம வேதங்கள் சாத்திரங்கள் போன்றவற்றை புரியாத மொழியில் ஆராவரத்துடன் ஓதுவார்கள். பிறவியில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றும் குலம், கோத்திரம் என்று பேதங்களை பெருக்கினார்கள். வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் ஒன்றுக் கொன்று மாறுபட்டவைகள். முன்னுக்குபின் முரணானது உண்மைக்கு மாறானது (சூது) இவைகளை குற்றமில்லாமல் (ஏதமற) உணர வேண்டும். ஆதியிலே ஏற்பட்ட மூடப்பழக்க வழங்கங்களில் சடங்குகளில் அறியாமையால் மிக்க விருப்பம் கொண்டு (அபிமானித்து) திரிகின்றார்கள். (அலைதல்) காலத்தை வீணாக்குகிறார்கள். வீண் வாதங்களிட்டு பேதங்களைப் பெருக்கி சண்டையிட்டு அழிகின்ற வரலாற்றை காண்கின்றோம். தீவிர வாதம் என்ற பெயரில் **இன்றும் சமயப் போரிட்டு அழிந்துக் கொண்டிருக்கின்றனர். கொள்ளை வினைகூட்டுறவால் கூட்டிய பல் சமயக்கூட்டமும் அக்கூட்டத்தில் கூவுகின்றகலையும் கள்ளமுறும் அக்கலைகள் காட்டிய பல்கதியும், காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம் பிள்ளை விளையாட்டு** என்பதை உணராதவர்கள்.

நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே அருட்ஜோதி (சிவம்) ஒருவரே ஒப்பற்ற தலைவர் (தனித்தலைவர்) சிவன் என்பது சைவ சமயத்தைச் சார்ந்தது. சி = இயற்கை உண்மை, வ = இயற்கை விளக்கம், ம் = இயற்கை இன்பம். உள்ளது விளங்க சிவம். இல்லாதது (கற்பனை) விளங்க சவம். மனித தேகத்தில் காரியப்படும் அருட்ஜோதி சிவத்தை வணங்குபவர்

சிவமாகுவர். மனிததேக ஒளி உடலைப்பெறுவர், இவர்களே சன்மார்க்க சங்கத்தவர்கள். உள்ளதை உள்ளபடி உண்மைகளை உரைப்பது திருவருட்பா. இதனை தினமும் பாராயணம் செய்பவர்களே சன்மார்க்க சங்கத்தவர். மனிதகுலத்தில் உண்மையை நிலைநாட்டவே மெய்ஞ்ஞான விளையாட்டை விளையாடுகிறார். (ஞான நிருத்தமிடல்) அருள்பாலிக்கிறார். **பொய்யுலக வாதனையை தவிர்த்தவர் உளத்தே சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தமசற்குரு. எல்லார்க்கும் பொதுவில் (நீதியில்) நடம் இடுபவர்.**

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே,
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநிலை நின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்றசிவமே
என்னரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே

விஷப்பையுடைய பாம்பைப் போன்ற குணமுடைய பொல்லாதவர்களையும் தாங்கிக் கொண்டும் இயக்கிக் கொண்டும் இருக்கிறார். அவர்கள் திருந்துவார்கள் என்று. (இது தான் நடுநிலை (இன்னேசெய்) சன்மார்க்க பணியில் ஈடுபட்டு நல்லதே செய்கின்றவர்களிடம் நட்பு கொண்டு உற்றதுணையாயிருப்பார். அஜாக்கிரதையால் இறந்தால் மீண்டும் மனிதனாக பிறப்பார்கள். பொல்லாதவர்கள் இறந்தால் வினைக்கேற்ப பிறவி (தாழ்ந்தபிறவி) எடுப்பார்கள். **பையுடை பாம்பனைய ரோடும் ஆடுகின்றோய் எனது பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோய் (சன்மார்க்கத்தை போதித்தவர்) உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம் பரவுக என்றுரைத்த மெய்ச்சிவமே.** உலகமே ஒரு குடும்பம். குடும்பத்தலைவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். அவர் திருவருளைப் பெற ஈரமும் (இரக்கம்) அன்புடையவர்களாக மக்கள் மாற வேண்டும். தாவரங்களை உண்டு சில மிருகங்கள்

வாழ்கின்றன. செத்தாலும் சாகுமேத்தவிர மாமிசத்தை உண்ணாது. மாமிசம் உண்பவர்கள் திருந்த வேண்டும். கொலைபுலை தவிர்த்தவர்களே சன்மார்க்கிகள்.

பொய்யாத வாய்மைகளே (உண்மைகள்) புகன்றிடுதல் வேண்டும். புகன்ற படி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும். சத்திய சோதனை நூல் எழுதிய தோடு நில்லாமல் அதன் படி வாழ்ந்தவர் காந்தியார். அகிம்சாமுறை (ஜீவகாருண்யம்) யில் வெற்றிப் பெற்றார். ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக்காக. ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும் என்றார். அதைநிலைநாட்ட இன்றைய அரசியல்வாதிகளில் ஒரு சிலரே பணத்திற்கு, பதவிக்கு ஆசைப்படாமல் உண்மைக்காக பாடுபடுபவர்கள் இருக்கிறார்கள்.

நீதிபதிகள் தீர்ப்பு கூறும்போது நீதியை நிலைநாட்டும் ஆண்டவரை வேண்டியே தீர்ப்பு கூறுவர். பணத்திற்கோ பதவிக்கோ ஆசைப்படாது தன்னுயிரையும் மதிக்காது தீர்ப்பு வழங்குவர். வாழ்வா, சாவா என்று எதிர்பார்ப்பவர்களுக்கு மண்ணோரம் (ஓரவஞ்சனை) பேசி வாழ்வை அழிக்காத. சில நீதிபதிகள் இன்றும் இருக்கிறார்கள். சிலர் பலராக வேண்டும். அப்போது தான் இயற்கைசீற்றம் ஏற்படாது, சுனாமி ஏற்படாது.

உள்ளதை உள்ளபடி கூறும் சன்மார்க்க சங்கத்தைச் சார வேண்டும். சன்மார்க்க மெய்நெறியை விளக்கும் திருவருட்பாவைப் பாடி பிரார்த்தனைச் செய்ய வேண்டும். மெய்ப்பொருளின் (ஆண்டவர்) திருவருளைப் பெற முயல வேண்டும்.சாதிசமயமத பேதங்களற்று ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையுடன் உபகாரப் பணியில் ஈடுபடும் வழியில் (வீதி) நின்றால் நம்முள் உள்ள ஒளி ஓங்கும். (மேவுகின்ற தருணம்) இன்புறலாம். எவ்வுலகம் ஏத்திட வாழ்ந்திடலாம். எல்லாம் செய்வல்ல சித்தி இறைமையும் பெற்றிட சன்மார்க்கத்திற்கு வாருங்கள் என அழைக்கிறார் (கூவுகிறார்) பெருமான்.

பாடல் - 2

காடுவெட்டி நிலம் திருத்தி காட்டெருவும் போட்டு
கரும்பைவிட்டு கடுவிரைத்து களிக்கின்ற உலகீர்
கூடுவிட்டு போயினபின் எதுபுரிவீர் எங்கே
குடியிருப்பீர் ஐயோ நீர் குறித்தறியீர் இங்கே
பாடுபட்டீர் பயன் அறியீர் பாழ்க்கிறைத்து கழித்தீர்
பட்ட தெல்லாம் போது·மிது பரமர்வருதருணம்
ஈடுகட்டிவருவீரேல் இன்பம் மிக பெறுவீர் எண்மை
உரைத்தேன் அலன்நான் உண்மை உரைத்தேனே

சன்மார்க்கிகள் இறந்தால் மனிதராக பிறப்பர்

கூடுவிட்டு போயினபின் எதுபுரிவீர் எங்கே குடியிருப்பீர் ஐயோ நீர் குறித்து அறியீர் இங்கே பரமான்மா (அருள்ஒளி) மனித உடலை (கூடு) விட்டு வெளியே சென்றால் உடல் சவமாகும். மனித ஆன்மா உடலின்றி அலையும். வினைக்கேற்ப மிருக உடல் கிடைத்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. இதையும் அளிப்பது பரமான்மாதான். ஆன்மாவால் தானாக எதுவும் செய்ய முடியாது (இயங்க முடியாது) தான் விரும்புவது (மனித உடல்) எல்லாம் கிடைக்காது. இதைப் பற்றி எண்ணிப்பார்க்க மாட்டார்கள். (குறித்தறியீர் இங்கே) ஒரு ஆன்மா எத்தனைப் பிறவி எடுத்தாலும் எந்தப் பிறவி எடுத்தாலும் பரமான்மா. (அருள்ஒளி) வந்து தான் இயக்க வேண்டும்.

ஈடுகட்டி வருவீரேல் இன்பம் மிக பெறுவீர்

தன்னுள் உள்ள ஆண்டவரிடம் தன்னை ஈடு கட்டுவதற்கு கீழ்க் கண்டவாறு பிரார்த்திக்க வேண்டும். "என்னை (ஆன்மாவை) உய்யக் கொள்ள (மாமனிதனாக) உபகரித்து அருளிய உடல், உள்ளம், உயிர் மூன்றையும் தந்தீர். அறியாமையால் யான் எனது கொண்டதோர் சுதந்தரமானது. **துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இருந்தது. சன்மார்க்க சங்கத்து சாதுக்கள் சமூகத்து நிற்கப்பெற்ற விசேஷத்தால் அந்த சுதந்தரப்பொருளை தேவரீர் பெருங்கருணை சந்நிதி (திருவடி) முன்னே**

அர்ப்பணித்துவிட்டேன். தாங்கள் தந்த உடல், உள்ளம், உயிரை ஈடுகட்டிவிட்டேன். தேவரீர் அதனை அருளுருவாக்கி ஏழையாகிய என்னையும் மற்றவர்களையும் உய்யக் கொண்டருள்க என விண்ணப்பிக்கவேண்டும். எண்மை உரைத்தேன் அலன் நான் உண்மை உரைத்தேன் இது தான் பரமர் வருதருணம். கற்பனையாக, இல்லாததை (எண்மை) உரைக்கவில்லை. உள்ளதை உள்ளபடி உண்மையை உரைக்கின்ற சன்மார்க்க சங்கத்தைச் சார வேண்டும். ஆண்டவர் அருளைப் பெற்று தரும் திருவருட்பா பாராயண பிரார்த்தனை செய்ய வேண்டும். நம் தகுதிக்கேற்றவாறு பசிதவிர்த்தல் போன்ற உபகாரப் பணிகளை செய்து ஆன்மநேய உணர்வோடு வாழ வேண்டும். இதன் மூலம் ஆண்டவர் அருட்பெருஞ் ஜோதியின் திருவருள் கிட்டும்.

காடுவெட்டி நிலம் திருத்தி காட்டெருவும் போட்டு கரும்பைவிட்டு கடுவிரைத்து களிக்கின்ற உலகீர் பாடுபட்டீர் பயன் அறியீர் பாழ்க்கு இறைத்து கழித்தீர் பட்டதெல்லாம் போதும் செடி, கொடி, மரம் போன்ற தாவரங்கள் புதர்போல் அடர்ந்து மேடு பள்ளமாக அடர்ந்த காடு போலிருக்கும் புறம்போக்கு நிலத்தில் உள்ள தாவரங்களை வெட்டி எடுத்து ஏர் உழுது அரும்பாடுபட்டு நிலத்தைப் பண் படுத்தி நீர்ப்பாய்ச்சி உலர்ந்த தழைகள் குப்பைகள் ஆடுமாடுகளின் சாணங்கள் போன்றவைகளை எருவாக பயன்படுத்துவார்கள். இனிக்கும் கரும்பைப் போன்ற உணவுப் பொருள்களை பயிரிட்டு அறுவடைச் செய்து எல்லோரும் உண்டு மகிழச்செய்வார்கள்.

வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவாய் அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி. விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க அளவு செய்து அமைத்த அருட்பெருஞ்ஜோதி. ஒரு மூட்டை விதை நெல்லை விதைத்து பயிரிட்டு நூறு மூட்டை நெல் அறுவடை கிடைக்கும்படி செய்வது இயற்கையே. (பஞ்ச பூதங்கள்) அதனை இயக்குகிற கருணாமூர்த்தி (ஆண்டவரே) ஆவார். அன்று நச்சுசெடிகளை இயற்கைக்கு விரோதமாக

பயிரிடமாட்டார்கள். இயற்கை சீற்றமும் ஏற்படுவதில்லை.

இன்றைய விஞ்ஞான உலகம் ஆண்டவரின் திருவருள் வல்லபத்தை உணராதது. விஞ்ஞானத்தை அழிக்கும் காரியங்களுக்கு பயன்படுத்துகிறார்கள். கோடிக்கணக்காக பணத்தை சம்பாதித்து தன் குடும்பத்தை வாழ வைக்கவும் பெரும்பாலான குடும்பங்கள் தவிக்கவும் சாகடிக்கவும் செய்கிறார்கள். இயற்கைக்கு விரோதமாக கஞ்சா போன்ற போதைப் பொருள் நச்சு செடிகளை பயிரிட்டு கோடிகணக்கில் சம்பாதிக்கிறார்கள். உலகெங்கும் மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து இயற்கை சீற்றம் ஏற்பட்டு வருவாய்க்குமேல் பலமடங்கு அழிவு நிலை ஏற்படுகின்றன. மேலும் இவர்கள் எந்த நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதைப்பார்ப்போம்.

பொய் கட்டிக் கொண்டு நீர் வாழ்கின்றீர், இங்கே புலைக்
கட்டிக்கொண்ட இப்பொய் உடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
சிறுபுழுவாகி திகைத்திடல் அறியீர்,
கைக்கட்டி வாய் பொத்தி நிற்பாரைக் கண்டே கைக்
கொட்டி சிரிக்கின்றீர் கருணை ஒன்றில்லீர்.
எய்க்கட்டியிடை மொய்க்கின்ற ஈயினும் சிறியீர்
எத்துணைக் கொள்கின்றீர் பித்துலகீரே.

பணமே நோக்கமுடையவர்கள் புண்ணையுடைய எருதின் நோவு அறியாத காகம் போன்றும், அப்புண்ணில் ஒழுகும் சீழ் இரத்தத்தைத் குடிக்க ஈக்கள் கொசுக்கள் ஊசி போல குத்தும். நாய்போல அலைந்து புலி போல பாய்ந்து வட்டி பணத்தை பெருக்குவார்கள். பொய்யை மூலதனமாகக் கொண்டு ஆசைக்காட்டி மோசம் செய்வார்கள். வயலுக்கு வரம்பு கட்டி (செய்கட்டி) வாழ்வது போல கீழ்த்தரமான திட்டங்களோடு வாழ்வார்கள். மது, மாமிசம், மங்கை (மலம்சார் தோலிலே) போன்றவைகளில் மயங்குவார்கள் தங்கள் ஊன்உடலைப் பற்றியே கவலைப்படுவார்கள்.

பணக்காரன் ஆணவத்தோடு (செருக்கோடு) கால் மேல் கால் போட்டு ஈசிசேரில் உட்கார்ந்திருக்கும் போது தவிர்க்க முடியாத தொல்லைதாங்காமல் ஒருவன் கடன் கேட்கவருவான். பணக்காரன் முன் கைக் கட்டிவாய் பொத்தி பயந்து கடன் கேட்பான். ஆணவத்தோடு கோபத்தோடு கைக்கொட்டி சிரிப்பான். புதியகடன் கொடுத்து பழையகடனும் அதன் வட்டியும் சேர்த்து சரிசெய்து நிலத்தை அபகரிப்பான். இரக்கமே காட்டமாட்டான். நூறு ஆண்டுகள் வாழ வேண்டியவன் தீய குணங்களால் ஐம்பது ஆண்டுகளே வாழ்கிறான், அதிலும் ஓரிரண்டு ஆண்டுகள் நோயால் அவத்தைப்பட்டு ஆணவம் அழியும், இறக்கும் நிலை ஏற்படும். இறந்ததும் அவ்வான்மாவிற்கு புழு உடல் கிடைக்கும். அந்த புழு உடல் கிடைக்க ஓரிரண்டு ஆண்டுகளாகும். அதுவரையும் அவ்வான்மா அலையும்.

பாடல் - 3

ஆற்றுவெள்ளம் வருவதன் முன் அணை போட அறியீர்
அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர்
கூற்றுவருங்கால் அதனுக் கெதுபுரிவீர் ஐயோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்ற விரும்பீரே
வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்
வீணுலகக்கொடுவழக்கை விட்டுவிட்டுவம்மின்
சாற்றுவக்க எனது தனித்தந்தை வருகின்ற
தருணமிது சத்தியஞ்சிற்சத்தியைச் சார்வதற்கே

வெள்ளம் வருமுன் அணைபோடுக

அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர். கூற்றுவருங்கால் அதனுக்கு எது புரிவீர் ஐயோ வேற்றுரைத்து வினை பெருக்கி மெலிகின்ற உலகீர் வீணுலக கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின். சினமுடைய கூற்றுவரும் (எமன்) செய்தி அறியீரோ செத்த நுமது இனத்தவரை சிறிது நினையீரோ. தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ (ஆணவம்) உலக மக்களே உண்மையை உணர்ந்து

வாருங்கள். (வம்மின்) சில ஆயிர ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது சாதிமத சமயங்கள் கொடுமை மிக்க மூடநம்பிக்கைகளை கொண்டவையாகும். (கொடுவழக்கை) புரியாத மொழியில் அர்ச்சனை செய்வார்கள். சிறு தெய்வங்களுக்கு மது மாமிசம் படைப்பார்கள். சிற்றுயிர்களை பலியிடுவார்கள். பல ஆயிரக்கணக்கான பணம் செலவிட்டு விழாக்கோலம் நடத்துவர். மது மாமிசத்தை அருந்தி இரக்கமற்ற பேய் போல் வேற்றுமைப்படுத்தி பிற சமயத்தினர் தெய்வங்களை இகழ்ந்துபேசுவர். ஆணவத்தோடு, கோபத்தோடு போரிட்டு மாண்டவரலாற்றை காண்கின்றோம். தீவிரவாதம் என்ற பெயரில் இன்றும் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. **தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ** (ஆணவம்) பொங்குறுவெகுளி புடைப்பு என்பது சினத்தால் (வெகுளி) தன்னுடம்பே பாதிக்கும் அளவு துடித்து (புடைப்பு) இரத்தம் பொங்குவதாகும். ஆணவத்தால் சினம் வரும் சினம் தன்னையும் சாகடிக்கும் மற்றவரையும் சாகடிக்கும். சினத்தால் செத்த நுமது இனத்தவரை நினையுங்கள் இவைகளை எல்லாம் விட்டு விட்டு சன்மார்க்கத்தை சாருங்கள் (வம்மின்)

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர். கூற்றுதைத்த சேவடியைப் போற்ற விரும்பீரே, சாற்றுவக்க எனது தனித்தந்தை வருகின்ற தருணமிது சத்தியம் சிற்சத்தியைச் சார்வதற்கே. கடலவை அனைத்தும் கரையின்றி நிலையுறஅடல் அனல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி. கடல் பொங்கினால் நாடே அழியும், அதற்கு கரையோ, அணையோ கட்ட முடியாது. என்னத்தான் அலை மோதினாலும் குறிப்பிட்ட தூரம் சென்று திரும்பிவிடும். கடல் மத்தியில் உள்ள (அடல் அனல்) நெருப்புக்குன்றம் கடல் பொங்காத படி கட்டுப்படுத்துகிறது. ஐம்பூதங்களாகிய இயற்கையை இயக்குபவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். மழை (பருவ) காலங்களில் ஆற்றில் நீர் (வெள்ளம்) பெருக்கெடுத்து ஓடி கடலில் கலந்து நீர்வீணாகிவிடும். அணைக்கட்டி நீர்தேக்கி பயிருக்கு நீர் பாய்ச்சவும், குடிக்கவும் குளிக்கவும் பயன்படுத்திக்கொள்வர்.

தப்பாலே உலகத்தவர் சாவேதுணிந்தார். மக்கள் எல்லாம் அக இனத்தாராக வேண்டும். சைவ உணவை உட்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் அகத்தே இருந்து இயக்குகிற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருள் கிடைக்கும். நீர்வாழ்வான, ஊர்வன பறப்பன, நடப்பன போன்ற பிராணிகள் ஐம்பூதங்களாகிய இயற்கையால் வாழ்கின்றன. புற இனத்தார் (அசைவர்) மீன் பண்ணை, எறாப்பண்ணை, கோழிப்பண்ணை, ஆடு மாட்டுப்பண்ணை போன்றவைகளை வைத்து விஞ்ஞான சாதனங்கள் மூலம் பெருக்கிக்கொன்று பக்குவப்படுத்தி உலகெங்கும் அனுப்பி பலஆயிரக்கோடி கணக்கில் பணம் சம்பாதிக்கின்றனர். கண்மூடி இச்சையால் கீழ்த்தரமான காரியங்களை செய்கின்றனர். உலக உயிர்களை வாழச் செய்யும். இயற்கைக்கு விரோதமாக புற இனத்தார் செயல்படுவதால் இயற்கை சீற்றங்கள் உலகெங்கும் தொடர்ந்து மூன்று ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பேய்காற்று பெருவெள்ளம், பூகம்பம், காட்டுத்தீப்போன்றவைகளால் உலகமே நடுங்குகின்றன.

சிற்சபையின்கண் (புருவமத்தியில்) (உயிர்) உள்ஒளியில் மனதை செலுத்துவதைத்தவிர மற்ற எந்தவித ஆபாசத்திலும் செலுத்தாது மனதை இழுத்து (இடைவிடாது) புருவமத்தியில் நிறுத்த வேண்டும். உயிர்நலப் பணியில் (பரோபகாரம்) உடல் ஈடுபடவேண்டும். உள்ளம், உயிர், உடல் கூறுபடாமல் ஒன்று படும்நிலை (ஒருமை) இது தான். **இணையிலா களிப்புற்று இருந்திட எனக்கு துணையடி** (இருதிருவடி) **சென்னியில்** (உச்சியில்) சூட்டிய தந்தையே மனம் போனபடி தவறு செய்வதாலேயே இறக்கிறார்கள். புறத்தே கற்சிலைக்ளை வணங்குபவர் புறஇனத்தவர்கள் ஆவர். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து அக இனத்தராகி திருவருட்பா பாராயணம் செய்வதை கேட்டுமகிழ்வர் (சாற்று உவக்க) மாமனிதர்கள். நம்முள் அருள்ஒளி ஓங்கும் (தந்தை வருதருணம்) இதுவே உண்மை. இறைவல்ல பத்தை (சிற்சக்தி) பெறுவதற்கு இதுவே வழியாகும்.

பாடல்- 4

பொய் விளக்கப் புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
புலை கொலை புரிகின்றீர் கலகல என்கின்றீர்
கைவிளக்குப் பிடித்து ஒரு பாழ்ங்கிணற்றில் விழுகின்ற
களியுர் எனக்களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐ விளக்கு மூப்பு மரணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ கொடிய முயற்றுலகீர்
மெய்விளக்க எனது தந்தை வருகின்ற தருணம்
மேவியது ஈண்டு அடைவீரேல் ஆவிபெறுவீரே

இந்திரிய (ஐயறிவு) ஒழுக்கம்

பொய் விளக்கப்புகுகின்றீர், போதுகழிக்கின்றீர், புலை கொலை புரிகின்றீர் கலகல என்கின்றீர், கைவிளக்குப் பிடித்து ஒரு பாழ்ங் கிணற்றில் விழுகின்ற களியர் எனக்களிக்கின்றீர் கொடிய முயற்றுலகீர். கள் குடித்தவன் (களியர்) போதையில் தடுமாறி ஒரு பாழடைந்த கிணற்றில் விழுந்துவிடுவான். என்னிடம் டார்ச்லைட் (கைவிளக்கு) உள்ளது நான் எப்படியாவது மேலேறிடுவேன் என்று வீம்புபேசுவான் குடிக்காரன். ஆடு, மாடு, கோழி போன்ற பிராணிகளைக் கொன்று அதன்மாமிசத்தை உண்பான் (புலை, கொலை புரிகின்றீர்) உடலுக்கு வலிவு ஏற்படும் என்பான். வஞ்சக விலை மாதர்கள் உடலை (புலை) தழுவுவான், துர்நாற்றத்தைப் பேர்க்க பீடி, சிகரெட் லாகிரிவஸ்துக்களை பயன்படுத்துவான், ஆராவரமாக வாய்க்குவந்ததெல்லாம் பேசுவான் (கலகலஎன்கிறீர்) கற்பனையாக பொய்களைப்பேசி பொறுத்தமில்லாத விளக்கங்களை கூறி காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பான். (போது கழிக்கின்றீர்) தீயசெயல்களை துணிவோடு செய்வான் (கொடிய முயற்றுலகீர்)

கருத்திருந்தும் கருதீர் ஐவிளக்கு மூப்பு மரணாதிகளைநினைத்தால் அடிவயிற்றை முறுக்காதோ. மெய் விளக்க எனது தந்தை வருகின்ற தருணம் மேவியது ஈண்டுஅடைவீரேல் ஆவிபெறுவீரே.

ஐவிளக்கு (ஒளி அறிவு) கண், காது, மூக்கு, வாய், மெய் போன்ற ஐந்து அறிவுடைய விலங்குகள் இயற்கையோடு ஒத்து வாழ்கின்றன. நாயானது தன்னை காப்பாற்றும் தலைவனிடம் விசுவாச மாயிருந்து அவனுக்காக தன் உயிரையும் இழக்க துணியும். பகுத்தறிவு, சிந்திக்கும் அறிவும் பேசவும் முடிந்த ஆறறிவு மனிதன் தன்னுள்ளிருந்து இயக்கும் (உள்ஒளியை) ஆண்டவரை (அகவழிபாடு - பிரார்த்தனை) நினைப்பதில்லை. உயிர்களை வாழவைக்கும் இயற்கைக்கு விரோதமாக உயிர்களைக் கொல்ல விஞ்ஞானத்தை பயன் ப:டுத்துகிறான். இயற்கை சீற்றத்திற்கு ஆளாகி திகைக்கிறான். (கருத்திருந்தும் கருதீர்) சன்மார்க்கத்தில் கூறும் ஞானேந்திரிய ஒழுக்கங்களை (ஐவிளக்கு) கடைப்பிடிக்க வேண்டும். **செவி** நாத முதலிய தோத்திரங்களை உற்றுக்கேட்டல் மற்றவை கேளாதிருத்தல் கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமலிருத்தல். **மெய்** அசுத்தங்களை தீண்டாதிருத்தல் **கண்** கொடூரமாய் பாராதிருத்தல் **வாய்** ருசியின் மீது விருப்பமின்றி இருத்தல் மூக்கு சுகந்தம் (நறுமணம்) விரும்பாதிருத்தல்.

சிறந்திடும் சன்மார்க்கம் ஒன்றே பிணி மூப்பு, பயம், துன்பம், மரணம் சேராமல் தவிர்த்திடும் தெரிந்துவம்மின்.

எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண இவ்வுலகில் எந்தை எனக்கு அளித்தான் - எவ்வுயிரும் சன்மார்க்க சங்கந்தனை அடைய செய்வித்தே என்மார்க்கம் காண்பேன் இனி என்கிறார் பெருமான். பாழ்ங்கிணற்றில் விழுகின்ற புறவழிபாட்டைத்தவிர்த்து திருந்தி சன்மார்க்கத்தைச்சார்ந்து உத்தமராகி உயிர் பணிப்புரிய வாரீர் எவ்வுலகம் ஏத்திட வாழ்ந்திடலாம் என்கிறார் பெருமான்.

பாடல் - 5

எய்வகைச்சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்று என்றறியீர்
கரிபிடித்து கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதஉடம்பு அழிந்திடில்என்புரிவீர் அழிவுடம்பை
அழியாமைஆக்கும்வகை அறியீர்
உய்வகை என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றது இவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே

ஆண்டவர் ஒருவரே

எய்வகைச்சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள் எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று கைவகையே கதறுகின்றீர். கரி பிடித்து கலகமிட்ட ெரியரினும் பெரியீர் பார்வையற்றோர் மூவரில் யானையின் காலைத்தொட்டவன் தூண் என்றும் காதை தொட்டவன் முறம் என்றும் முதுகைத் தொட்டவன்மலை என்றும் எல்லாம் உணர்ந்த பெரியவர்கள் போல உறுதியாக கூறிகுழப்பத்தை. கல்க்கத்தை (கலகமிட்ட) ஏற்படுத்தினர். அவர்கள் நிலை உள்ளது உள்ளபடி கூற முடியாத பார்வையில்லாத நிலை. பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்தோன்றிய சமயங்கள் மதங்கள் எண்ணில் அடங்காது. வேத ஆகம சாத்திர புராண இதிகாசங்கள் கணக்கற்றவை. கற்பனையாக மனம் போனபடி கைக்குவந்தபடி (கைவகையே) எழுதியவையாகும். கற்பனை தெய்வ உருவச்சிலைகளை அமைத்து புரியாத மொழியில் அர்ச்சனை பண்ணுகின்றனர், ஓல மிடுகின்றனர் (கதறுதல்) ஒரு தெய்வம் என்பதை மறைத்து இது எமது தெய்வம் இது எமது தெய்வம் என்று பேதங்களும் வீண் வாதங்களும் உருவாக்கி போரிட்டு மாண்ட வரலாறுகளை கண்டும் திருந்தாமலிருக்கிறார்கள். தொடர்ந்து இன்றும் சமய மதங்கள் தீவீரவாதம் என்ற பெயரில் விஞ்ஞான போர்க்கருவிகளை தயார்செய்து மக்களையே நாட்டையே அழிக்கின்றனர்.இது பார்வை உள்ள. பெரியவர்கள் நிலை.

தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும் சேர் கதி பல பல செப்புகின்றாரும் பொய்வந்தகலைபல புகன்றிடுவாரும் பொய்சமயாதியை மெச்சுகின்றாரும் மெய்வந்ததிருவருள் விளக்கமில்லார் வீண்கழிக்கின்றனர் முயன்றுலகில் பயன் அடையா மூடமதம் அனைத்தும், கொள்ளைவினை கூட்டுறவால் கூட்டிய பல் சமய கூட்டமும் பாவ நெறியாகும் பன்னெறி சமயங்கள் மதங்கள் என்றிடுமோர் பவநெறி இது வரை பரவியது சென்னெறி அறிந்திடாது இறந்தனர்.

தெய்வம் ஒன்று என்றுஅறியீர் ஐவகைய பூதஉடம்பு அழிந்திடில் என்புரிவீர் அழிஉடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர் உய்வகை என் தனித்தந்தை வருகின்ற தருணம் உற்றது இவண் உற்றிடுவீர். பெற்றிடுவீர் உவப்பே. ஆண்டவர் ஒருவரே அவரே அருட்ஜோதி சிவம். உலகமே ஒரு குடும்பம், இவரே குடும்பத்தலைவர். மனிதகுலத்திற்கே ஒரே தெய்வம். இதனால் பெருமான் உலகீர் என அழைத்து உண்மையை கூறுகிறார். நிலம், நீர், காற்று, அனல், ஆகாயம் ஐந்து பூதங்கள் அண்டத்தில் உள்ளது. போல பிண்டத்திலும் (மனிதனில்) உள்ளது. வானில்,அருட்பெருவெளி பொன்னம்பலத்திலிருந்து சிவம் ஐம்பூதங்களை இயக்கி உலகத்தை உலகத்து உயிர்களை காப்பாற்றுகிறது. தென்றல் காற்று (பிராணவாயு) மழை, பண்பட்டநிலம் போன்றவைகளால் ஐம்பூதங்களால் வாழ்கின்றோம். இயற்கைக்கு விரோதமாக புலை கொலைபுரிந்து மக்கள் வாழ்ந்தால் புயல்காற்று, பெருவெள்ளம், பூகம்பம் போன்றவைகள் ஏற்பட்டு மக்கள், நாடு அழிகின்றன.

ஐம்பூதங்களை பயன்படுத்தி வாழ்கிற நமக்கு சீதளம், பித்தம், முடக்குவாதம் போன்ற நோய்கள், மரணம் ஐம்பூதங்களால் ஏற்படுகின்றன பார்த்தல், கேட்டல் போன்ற ஐந்து அறிவுகளை உடையது பிராணிகள். அதோடு பேசுகிற பகுத்து சிந்திக்கிற அறிவோடு ஆறறிவுடையவன் மனிதன். ஞானம்விளையும் விளையாட்டை ஆண்டவர் மனித

தேகத்தில் காரியப்படுத்துவதால் மெய்ஞ்ஞானிகள், விஞ்ஞானிகள் உருவாகின்றனர். (சிற்சபையில் விளங்குகிற தெய்வம்) ஆண்டவர் வள்ளற் பெருமான் ஒருவருக்கு மட்டுமே (உலத்திலேயே) ஐந்தொழில் செய்யும் ஆற்றலைத்தந்தார். அழியா நித்திய ஒளி உடலைப் பெற்று இன்றும் உலகெங்கும் சன்மார்க்க கொள்கைகளை பரப்பிக் கொண்டிருக்கிறார். உள்ளதை உள்ளபடி கூறும் சன்மார்க்க மெய்நெறிகளை திருவருட்பா மூலம் வெளிப்படுத்துகிறார். அழிஉடம்பை அழியாமை ஆக்குவது உலகத்திலேயே சன்மார்க்க சங்கம் ஒன்றுதான் (உற்றது இவண்) சன்மார்க்க சங்கத்தை சார்ந்திடுவீர் (உற்றிடுவீர்) ஜீவகாருண்ய ஒழுக்கங்கள் போன்றவைகளை கடைப்பிடித்து திருந்தி புலை, கொலை தவிர்த்த அக இனத்தாராக மாற வேண்டும். எல்லா உயிர்களையும் நேசிக்கும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை சகோதரராக மாற வேண்டும். நம்அகத்தே இருக்கும் இறைவனை இடைவிடாது நினைக்கவாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் திருவருட்பா ஓதி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பன்மார்க்க எல்லாம் பசையற்று ஒழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றே தனழத்ததுவே - சொன்மார்க்கத்து
எல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறி அருளைக் கொண்டு

பன்மார்க்கம் உலகியலையும், புறவழிபாட்டையும் பெரிதுபடுத்தும் மக்கள் கூட்டத்தை, வருவாயை விரும்பி திருந்து என சொல்லாது. பசையற்று = மக்கள் உள்ளத்தில் பிடிப்பில்லாது சொன்மார்க்கம் = உள்ளதை உள்ளபடி சொல்லுகிற சன்மார்க்கம் இசைந்தனவே = ஏற்றுக்கொண்டன

பாடல் - 6

உடம்புவருவகை அறியீர் உயிர்வகையை அறியீர்
உடல் பருக்க உண்டு நிதம் உறங்குதற்கே அறிவீர்
மடம்புகும் பேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறை கற்றறியீர்
இடம் பெறும் பொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே
எண்ணி எண்ணி இளைக்கின்றீர் ஏழை உலகீரே
நடம்புரி என் தனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினோ புண்ணியம் சார்வீரே

வன்புடை மனதை நன்மனமாக்கினார்

உடல் பருக்க உண்டு நிதம் உறங்குதற்கே அறிவீர். மடம் புகும் பேய் மனத்தாலே மயங்குகின்றீர். இடம் பெறும் பொய் வாழ்க்கையிலே இன்ப துன்பம் அடுத்தே எண்ணி எண்ணி இளைக்கின்றீர். உலக மாயையில் மயங்கி அறியாமையில் மூழ்கிதவிக்கிற உலகத்தவரே (ஏழை) நாள்தவறாது வேளை தவறாது உண்டு உடலைப்பெருக்கிக் (பருக்க) கொண்டு உண்டகளைப்பில் மணிகணக்கில் உறங்குவதைத்தான் அறிவீர்கள். அறியாமையால் (மடம்) மண் பெண் பொன் போன்றவையில் பேராசைக்கொண்டு பேய்போல அலைந்து மயங்குகிறீர். உலகம் சார்ந்தவாக்கு வாதங்களில் (சார்உலகவாதனை) பொய்களே இடம்பெறுகிறது. பின்பு இதனால் வாழ்க்கையில் ஆரம்பத்தில் இன்பமாக தோன்றி பின்பு துன்பத்திற்கு ஆளாகி பயந்து மனம்தளர்ந்து வாழ்க்கையை வெறுக்கிறீர்கள். நம்முள்ளிருந்து இயக்கும் இறைவனை இடைவிடாது பிரார்த்தித்தால் எந்த நிமிடத்திலும் போகும் உயிரை தடுத்து நிறுத்தலாம். இதனை அறியாது உலக மாயையில் மயங்கி இறக்கிறார்கள்.

ஓவுறாத் துயர்செயும் உடம்புதான் என்றும்
சாவுறாது இன்பமே சார்ந்து வாழலாம்
மாவுறாச் சுத்த சன்மார்க்க நன்னெறி
மேவுறார் தங்களை விடுக நெஞ்சமே

ஓவுறா = நீங்காது, மாவுறா = பெருமை மிக்க, மேவுறார் = ஏற்காதவர்

உடம்பு வருவகை அறியீர் உயிர்வகையை அறியீர் மனத்தை வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறை கற்றறியீர் நடம்புரி என் தனித்தந்தை வருகின்ற தருணம் நண்ணியது நண்ணுமினோ புண்ணியம் சார்வீரே

எறும்பு முதல் யானை வரை (மனிதனும்) எல்லா உயிர்களும் சிற்றுணுபசு (சிறு அணுவாகிய ஆன்மா) ஆன்மா என்றும் அழிவதில்லை. இறந்து கொண்டு பிறந்து கொண்டிருக்கும். வினைக்கேற்ப உடல் கிடைக்கும். அகங்காரம் பிடித்த கொலைக்காரன் நூறு ஆண்டுகள் வாழவேண்டிய மனிதன் ஐம்பதாவது வயதிலேயே இறந்து சில ஆண்டுகள் ஆன்மா அலைந்து புழுவாக பிறப்பான். மனிதகுலத்திலேயே 1874ல் வள்ளற்பெருமான் ஒருவர்தான் (நித்திய மனித ஒளி உடலை) பெற்றுள்ளார். உயிர் வகை பல இலட்ச கணக்கில் உள்ளன. உலகீர் பிறந்த இந்த பிறப்பிலேயே உடம்பை நிலைக்க செய்ய சன்மார்க்க மெய்நெறியினை முழு முயற்சியோடு கடைப்பிடிக்க வேண்டும். வஞ்சக மனத்தால் சாகிறார்கள். நாள் தவறாது விடியற்காலை தீபம் ஏற்றி தீபமுன்னிலையில் திருவருட்பா பாடி நம்முள் உள்ள ஆண்டவரைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். மனதை வசப்படுத்தும் வழி இதுதான். அம்பலப்பற்றே (சிற்றம்பலம்) பற்றுமினோ என்றும் இறவீரே. இச்சை (அம்பலபற்று) எலாம் எனக்கு அளித்தே எனை கலந்த தெய்வம். மெய் (உண்மை) அகத்தே விரும்பி இங்கே (சன்மார்க்க சங்கத்திற்கு) வந்திடுமின். (சத்தியம்) உண்மை தவறாதவர் தவறுகள் செய்ய மாட்டார்கள். (துப்பால்தான் சாவு ஏற்படுகிறது) மேலும் கோபம், ஆணவம், காமம் போன்ற தீய குணங்கள் ஏற்படாது இவர்கள் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க உயிர்நலப் பணியை (இரக்கம்) மேற்கொள்வார்கள். (புண்ணியம் சார்வீரே) ஆண்டவரை **ஓர்உறவு என்று அடைந்து உலகீர் போற்றி மகிழ்ந்திடுமின் உள்ளம் எலாம் அன்பால் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே. நம்முள் உள்ள ஒளி** ஓங்கி நம்மில் அருட்பிரகாசம் திகழும் (நண்ணியது உள்ஒளி) நண்ணுமினோ (விரும்புங்கள்) இரக்கம் அன்பால் இறைவன் திருவருள்பெற்று எல்லாம் வல்ல சித்தியை அடையலாம்.

பாடல் 7

நரை மரண மூப்பு அறியாநல்ல உடம்பினரே
நற்குலத்தார் என அறியீர் நானிலத்தீர் நீவீர்
வரையில் உயர்குலம் என்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண்கின்றீர்
புரையுறுநும் குலங்கள் எல்லாம் புழுக்குலம் என்று
அறிந்து புத்அமுதம் உண்டு ஒங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறும் என் தனித்தந்தை வருகின்ற தருணம் உற்றது
இவண் உற்றிடுவீர் உண்மை உரைத்தேனே

சன்மார்க்கமே மாமனிதனாக்கும்

நானிலத்தீர் நீவீர் வரையில் உயர் குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக் காண்கின்றீர் புரையுறும் நும் குலங்கள் எல்லாம் புழுக்குலம் என்று அறிந்தே. நான்கு திசைகளையுடைய உலகத்தில் வாழ்பவர்களே (நானிலம்) குறிப்பிட்ட வரம்பு இல்லாமல் அளவின்றி (வரம்பில்) சாதிகுலம். சமயம் மதம் என ஏற்படுத்திவிட்டார்கள். சதுர்மறை ஆகம வேதங்கள் ஆணவத்தோடு பிறப்பால் உயர்ந்தகுலம், தாழ்ந்த குலம் என்று கூறுகிறது. சிந்திப்பதாலும், பேசுவதாலும் பெறுதற்கரிய மனிதப்பிறப்பைப் பெற்ற மனிதர் பலர் ஐந்தறிவுடைய மிருகங்களைவிட கேவலமாக வாழ்ந்து மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டு சாதிகுலம் சமய மதங்களில் பேதப்பட்டு வீண்வாதமிட்டு தீய குணங்களால் மனித உள்ளம் புரையோடி போரிட்டு மாண்ட வரலாற்றை காண்கிறோம். **சதுர்மறை ஆகம வேதங்கள் சந்தைப்படிப்பு. (பணம் சம்பாதிப்பது) சொந்தபடிப்போ?** திருந்தவும், நம்மை பண்படுத்தவும் செய்யும் திருவருட்பாவே சொந்தபடிப்பு. **உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம்பரவுக என்றுரைத்த மெய்ச்சிவமே** எல்லா உயிர்களிலும் உள்ஒளி (ஆண்டவர்) இருந்து இயக்குவது மெய் சிவமே. நாம் சவமாகாமல் சிவமாக திகழ நம் உடலில் (மெய்) இருப்பவர். எல்லா உயிர்களையும் ஆன்மநேயத்தோடு

நோக்கி உயிர்நலப் பணி புரிதல் வேண்டும் (இரக்கம்) திருவருட்பாபாடி போற்றுவது ஆண்டவரிடம் செலுத்தும் அன்பு ஆகும். இரக்கம் அன்பு கொண்டு தான் ஆண்டவர் திருவருளைபெறமுடியும். மற்றவை புரையோடிய மனம், இதை மறந்து புறவழிபாடு செய்வதால் சத்தான உள்ஒளி மங்கி சிவமாக வேண்டியவன் சவமாகிறான். எலும்பற்ற புழுக்கள் போல் உண்மையறியாது நெளிந்து நொந்து வாழ்ந்து சாகிறான்.

நரை, மரண, மூப்பு, அறியா நல்ல உடம்பினரே நற்குலத்தார் என அறியீர், புத்அமுதம் உண்டு ஓங்கும் புனித குலம் பெறவே. உரை பெறும் என் தனித்தந்தை வருகின்ற தருணம் உற்றது இவண். உற்றிடுவீர் உண்மை உரைத்தேனே. நற்குலத்தவரே உயர்ந்தகுலம் (சன்மார்க்கிகள்) தீய குலத்தவர் துன்மார்க்கிகள், தாழ்ந்த குலத்தவர். தப்பாலே உலகத்தவர் சாவே துணிந்தார் குற்றம் (புரையோடச் செய்வதுசத்தை அழிப்பது) செய்ய வில்லை என்றால் சாவே கிடையாது. குற்றம் இல்லையேல் கூற்றம் (எமன்) இல்லை. (கம்பர்) புலால் சோற்றாசையோடு காமச்சேற்றாசைப் படுவோரை துணிந்து கொல்ல கூற்றாசை (எமன்) கொள்ளும். கொலைபுலை தவிர்க்காதவர் மது, மாமிசம், மருவு மங்கை, லாகிரி வஸ்துக்களை தவிர்க்க விரும்பாதவர், நரை, திரை, மூப்பு, பிணி, பயம், துன்பத்திற்கு ஆளாகுபவரே தீய குலத்தாராகி இறக்கிறார்கள். உலகத்திலேயே இறப்பொழிக்கும் மார்க்கம் சன்மார்க்கம் ஒன்றே ஆகும்.

உலகில் ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் என்ற நிலை கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று எந்த காலத்திலும் இருக்கும். உயர்ந்தவர் தீய குணங்களால் தாழ்ந்த நிலை அடைவர். தாழ்ந்தவர் நற்குணங்களால் உழைப்பால் உயர்வர். உலகிற்கு ஆண்டவர் ஒருவரே (அருட்பெருஞ் ஜோதி) என்று உலக மக்கள் ஏற்க வேண்டும். பணத்தால், பதவியால், உயர்ந்தவர் என்பர். 2. ஒத்தவர் என்பது உயர முடியாமலும் தாழ்ந்து விடாது எச்சரிக்கையாய் இருப்பவர் 3

தீயபழக்கத்தால் தாழ்த்தவர். ஆக மூவரும் ஒருமையுளராகி ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை சகோதரர்களாக உலகியல் நடத்த வேண்டும். மூவரும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருளைப் பெற சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து முயல வேண்டும். இதுவே நம் தந்தை வரும் உபாயம். உள் ஒளி ஓங்கும். பணத்தால் பதவியால் திருவருளைப்பெற முடியாது. தியானம், தவத்தை விட சிறந்தது பிரார்த்தனை. சங்கத்தில் திருவருட்பா பாராயண பிரார்த்தனை செய்யலாம். தனித்தும் செய்யலாம். ஆண்டவர் பெருமைகளை (உரை பெறும்) போற்றி பாடுவதால் அவர் அன்பு கிடைக்கும். பாடல்களிலுள்ள நம் சிறுமைகளை உணர்ந்து நாம் திருந்த வேண்டும். உயிர்நலப்பணியில் இரக்கத்தோடு தனித்தோ, சேர்ந்தோ ஈடுபட்டால் திருவருள் கிடைக்கும். ஈரமும் (இரக்கம்) அன்பு கொண்டு இன்னருள் பெற்றேன். இதுவே உண்மை.

பாடல் - 8

கனமுடையேம் கட்டுடையேம் என்று நினைத்து இங்கே
களித்து இறுமாந்து இருக்கின்றீர் ஒளிப்பிடமும் அறியீர்
சினமுடைய கூற்றுவரும் செய்தி அறியீரோ செத்த
நுமது இனத்தாரைச் சிறிது நினையீரோ
தினகரன் போல் சாகாத தேகம் உடையவரே
திருவுடையார் எனஅறிந்தே சேர்ந்திடுமின் ஈண்டே
மனமகிழ்ந்து கேட்கின்றவரமெல்லாம் எனக்கே
வழங்குதற்கு என் தனித்தந்தை வரும் தருணம் இதுவே

<u>உயிர் உறவு உள் ஒளியே</u>

கனமுடையேம் கட்டுடையேம் என்று நினைத்து இங்கே களித்து இறுமாந்து இருக்கின்றீர். ஒளிப்பிடமும் அறியீர். சினமுடைய கூற்றுவரும் செய்தி அறியீரோ செத்த நுமது இனத்தாரைச்சிறிது நினையீரோ. (கனமுடையேம்) பணவசதியால், பட்டபடிப்பால், பதவியால் உயர்ந்திருக்கிறீர். மகாகனம் என்று போற்றும் அளவில் மேன்மை நிலையில் இருக்கிறீர். பொருளீட்டுவதிலேயே

நாட்டங்கொண்டு ஆடம்பரவாழ்வில் வாழ உழைக்காமல் உயர்வதற்கு எண்ணி மகிழ்கிறீர்கள். புனித மான மக்கள் இனத்தை சாதிசமயம் மதம் என வேதாகமங்கள் பாகுபடுத்திவிட்டன. உலகத்திலேயே எங்கள் சமயத்தை சார்ந்தவர்கள் கட்டுபாடாய் (கட்டுடையேம்) இருக்கிறோம் என நினைத்து மகிழ்ந்து செருக்கோடு (இறுமாந்து) இருக்கிறீர்கள். ஒரு நாட்டில் ஒரு சமயத்தை சார்ந்தவர்களுக்கு தொல்லை ஏற்பட்டால் மற்றநாட்டில் உள்ள அதே சமயத்தை சார்ந்தவர்களுக்கு கோபம் ஏற்படும். பெரும்பான்மையுடைய சமயத்தை சார்ந்தவர் என்ற செருக்கினால்சிறுபான்மையுடைய சமயத்தின் மீது கோபப்பட்டு போரிட்டு மக்கள் மாண்ட வரலாற்றை (கூற்று வரும் செய்தி) பார்க்கிறோம் ஆதியிலிருந்து இன்று வரை தொடர்ந்து நீளுகிறது. மாமனிதராக உயர வேண்டிய மனித இனம் புனிதகுலமாக மாறாமல் புழுக்குலமாக மடிகிறார்கள் இன்றும் தீவிரவாதம் என்ற பெயரில் சமயப்போர் நடந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு புகலிடம் (ஒளிப்பிடம்) சன்மார்க்கமே.

தினகரன் போல் சாகாத தேக முடையவரே திருவுடையார் என அறிந்தே சேர்ந்திடுமின் ஈண்டே. மன மகிழ்ந்து கேட்கின்ற வரமெல்லாம் எனக்கே வழங்குதற்கு என் தந்தை வருதருணமிதுவே. வானில் அருட் பரவெளியில் (பொற்சபையில்) அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் காற்று நீர் போன்ற ஐம்பூதங்களை இயக்குகிறார். அண்டசராசரங்கள் எங்குமுள்ள உயிர்களில் அறிவு விளங்குமிடத்தில் (சிற்சபை) உள்ள மெய் அறிவுருவான ஆண்டவர் மெய்ஞ்ஞான விஞ்ஞான அறிவை வளர்க்கிறார். கண்மூடி கண் திறப்பதற்குள் ஆண்டாண்டங்களுக்கு அப்பாலுள்ள சூரிய உதயத்தை (தினகரன்) காண்கிறோம். சூரியன் உலகவட்டதையே நாற்பத்தெட்டு மணிநேரத்தில் சுற்றி வருகிறான் ஒய்வு இன்றி. மனித குலத்திலேயே வள்ளற் பெருமான் ஒருவர்தான் ஆண்டவர் திருவருளை பரிபூரணமாக பெற்றார். ஐந்தொழில் செய்யும் வல்லபம்

பெற்றார். மேலும் நித்திய ஒளியுடைய மனித தேகத்தைப் பெற்று சூரியனை போல் அண்டாண்டங்களுக்கும் அரைக்கணத்தில் சென்று இன்றும் சன்மார்க்க கொள்கைகளை ஒய்வின்றி பரப்பிக்கொண்டிருக்கிறார். உலக நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெற சூரிய ஒளி (பகல் நேரம்) தேவைப்படுகிறது. மனிதனுக்கு ஏற்படும் பசி, பிணி, மூப்பு, பயம், துன்பம் மரணம் போன்றவைகளை தவிர்க்கக்கூடிய இடம் உலகத்திலேயே சன்மார்க்கம் ஒன்று தான். இப்பொழுதே சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்து மரணமிலா பேரின்ப பெருவாழ்வை அடையுங்கள்.

கடல் உலகும் வானும் அதிபதி என்று ஆளுகின்றீர் அதிபதியீர் நீவீர். மரணபயம் தவிராதே வாழ்வதில் என்பயனோ. திரணமும் ஒர் ஐந்தொழிலைச் செய்ய ஒளி வழங்குமிடம் சன்மார்க்கமே. பசிபிக்மகா சமுத்திரம் வானில்உள்ள செவ்வாய்கிரகம் என் ஆளுகைக்கு உட்பட்டது என பெருமைப்பட்டு போரிடுகின்றீர். மரண பயத்தை தவிர்க்க முடியவில்லை. திரணமும் (ஒன்றிற்கு உதவாதவன் (துரும்பு) கூட ஐந்தொழில் செய்யும் அருள் ஒளி வல்லபம் பெறுமிடம் சன்மார்க்க சங்கமே. சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து ஆண்டவர் திருவருளைப் பெற்றால் எல்லாம்செய் இறைமை வல்ல பத்தைப்பெறலாம். இன்புறலாம் எவ்வுலகம் ஏத்திட வாழ்ந்திடலாம்.

பாடல் - 9

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது வாழ்க்கை
எலாம் வாழ்க்கை என மதித்து மயங்காதீர்
மையகத்தே உறும் மரண வாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே
வாழ்க்கை என மதித்து அதனைப் பெறவே
மெய் அகத்தே விரும்பி இங்கே வந்திடுமின் எனது
மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணந்தனிலே
செய் அகத்தே வளர் ஞான சித்திபுரந்தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணம் இது தானே

நம் அகமே ஞானசித்திபுரம்

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது வாழ்க்கை எலாம் வாழ்க்கை என மதித்து மயங்காதீர். மையகத்தேயுறும் (வஞ்சக மனம்) மரண வாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே வாழ்க்கை என மதித்து அதனைப் பெறவே. கடலால் சூழப்பட்ட மண்ணுலகில் (வையகம்) வாழ்கின்ற மக்களே பல வெளிகளால் சூழப்பட்ட (அருள்வெளி பரவெளி) வான் வெளியில் வாழ்கின்ற தேவர், மூவர், சித்தர், விஷ்ணு பிரம்மாக்களே, மேலும் பல இடங்களில் வாழ்பவர்களே கேளுங்கள் நீங்கள் யாவரும் மாயையால், வினையால் மனம், மதி மயங்கி தவறு செய்பவர்களே. நித்திய வாழ்வைப் பெற முயற்சிக்க வில்லை. மனித ஆயுள் நூறு ஆண்டுகள் விஷ்ணு ஆயுள் 13,000 ஆண்டுகள். பிரம்மா ஆயுள் 12,000 ஆண்டுகள். உலகத்திலேயே சுத்தபிரணவ ஞானதேக மெனும் முத்திறல் தேக சித்தியாகிய மரணமிலா பேரின்ப பெரு வாழ்வை பெற்றவர் (1874ல்) வள்ளற் பெருமான் ஒருவரே, மேலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஐந்தொழில் செய்யும் வல்லபத்தை அளித்துள்ளார். சன்மார்க்க கொள்கைகளை அண்டசராச்சரங்கள் தோறும் இன்றும் ஓய்வின்றி பரப்பிக் கொண்டிருக்கிறார். **தப்பாலே உலகத்தவர் சாவே துணிந்தார்** தீயச்செயல்களால் மரணம் ஏற்படுகிறது. நாமெல்லாம் காரியப்படுவதற்கு நம்முள்ளிருந்து இயக்குகிற அருட்ஜோதிசிவத்தை நினைப்பதில்லை. உலக சுகபோகத்தை பெருக்கிக் கொள்வதிலேயே கருத்தாய் இருக்கிறீர்கள்.

சத்தியம் செய்கின்றேன் சகத்தீர் அறிமின்கள்
சித்திஎலாம் வல்ல சிவம் ஒன்றே - நித்தியம் என்று
எண்ணும் எண்ணத்தாலே நம் எண்ணமெல்லாம்
கைக்கூடும் நண்ணும் இன்பத்தேன் என்று நான்

உலக மக்களே (சகத்தீர்) தெரிந்து கொள்ளுங்கள். (அறிமின்கள்) உலகில் அழியா (நித்திய) மெய்ப்பொருள் அருட்ஜோதி சிவம் ஒன்று தான். (சிவன் என்பது சைவ சமயம்) சி = இயற்கை உண்மை, வ = இயற்கை விளக்கம், ம்

= இயற்கை இன்பம். உள்ளது விளங்க சிவம். இல்லது விளங்க சவம். ஏக சிற்சித்தியே இயலுற அனேகம் ஆகியது. (கரும, யோக, ஞான சித்தி) அருட்ஜோதி சிவத்தின் திருவருள் பெறுவதே நம் குறிக்கோளாக இருந்தால் நினைக்கிற காரியம் எல்லாம் வெற்றி பெறும் (கை கூடும்) பேரின்பத்தேன் கிடைக்கும் என்று உண்மையை ஆணையிட்டு (சத்தியம்) சொல்கிறேன்.

மெய் அகத்தே விரும்பி இங்கே வந்திடுமின் எனது மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணந்தனிலே செய் அகத்தே வளர் ஞான சித்திபுரந்தனிலே சித்தாடல் புரிகின்றார் திண்ணம் இது தானே. உள்ளதை உள்ளபடி அறிந்து கொள்ள (மெய் அகத்தே விரும்பி) சன்மார்க்க சங்கத்தைச் சாருங்கள். மனம் போன படி கற்பனையாக ஆசைகளை தூண்டுவதும் அச்சத்தை உண்டாக்குவதுமான மார்க்கம் அல்ல. உண்மையை உணர்ந்து உண்மையை பேசி திருந்த வேண்டும். (மெய் அகத்தே) புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும். மனித தேகத்தில் ஆண்டவர் காரியப்படுகிறார். சன்மார்க்க நெறியை கடைப்பிடிப்பவர் உள்ளத்தே இருந்து விலகாத பொருளாய் (மெய்ப்பொருள்) கண்ணுங்கருத்துமாய் காத்துவரும் தந்தையாய் விளங்குகிறது உள்ஒளி. உள்ஒளியை மறைக்கும் ஆணவம், கோபம், காமம் போன்ற ஏழு திரைகளை, தீய குணங்களை நீக்கி திருந்த வேண்டும். (செய் அகத்தேவளர் ஞான சித்திபுரம்) சத்திய ஞானசபை என்னுள் கண்டனன் சன்மார்க்க சித்தியை (மரணமிலாப் பெருவாழ்வு) நான் பெற்றுக் கொண்டனன். இது உறுதியான (திண்ணம்) வார்த்தையாகும்.

இருட்பெரு மலமுழுதும் தவிர்ந்திற்றது
மருட்பெரும் கன்மமும் மாயையும் நீங்கின
தெருட்பெரும் சித்திகள் சேர்ந்தன என்னுளத்தே
அருட்பெருஞ்ஜோதி என் அன்பிற் கலந்தே

அறியாமை இருள் முழுவதும் (ஆணவமலம்) நீங்கியது. முற்பிறவியில் செய்த கர்மவினையால் ஏற்பட்ட திண்டாட்டம் (மருள்) உலகியலில் மண், பெண், பொன், போன்றவைகளால்

ஏற்படும் பேராசை மயக்கம் (மாயை) ஒழிந்தன. தெளிவுடன் விளக்கமாக புரிகிற அற்புத அதிசய சித்திகள் நடத்தும் ஆற்றலை பெற்றேன். எந்த ஆ்பாசத்திலும் மனதை செலுத்தாது இடைவிடாது சிற்றம்பலத்தில் ஆண்டவரைப் போற்றிபாடி அன்பு செலுத்துவதாலும் அவர் அருளால் உயிர் நலப் பணி புரிவதாலும் எல்லாம் செய்வல்ல சித்தி இறைமையை பெற்றேன் என்கிறார் பெருமான்

பாடல் - 10

கரணமிகக் களிப்புறவே கடல் உலகும் வானும்
அதிபதி என்று ஆளுகின்றீர் அதிபதியீர் நீவீர்
மரணப்பயம் தவிராதே வாழ்வதில் என்பயனோ
மயங்காதீர் உயங்காதீர் வந்திடுமின் ஈண்டே
திரணமும் ஓர் ஐந்தொழிலைச் செய்ய ஒளி வழங்கும்
சித்திபுரம் என ஓங்கும் உத்தரசிற்சபையில்
சரணம் எனக்களித்து எனையும் தானாக்க எனது
தனித்தந்தை வருகின்ற தருணம் இது தானே

உத்தமன் ஆகுக ஓங்குக

திரணமும் ஓர் ஐந்தொழில் செய்ய ஒளி வழங்கும் சித்திபுரம் என ஓங்கும் உத்தர சிற்சபையில். சரணம் என களித்து எனையும் தானாக்க எனது தனித்தந்தை வருகின்ற தருணம் இதுதானே. மயங்காதீர் உயங்காதீர் வந்திடுமின் ஈண்டே. அருட்ஜோதி ஆண்டவர் வானில் அருட்பரவெளியில் (பொற்சபையில்) ஐம்பூதங்களை (காற்று, நீர்) இயக்கி உயிர்களை வாழவைக்கிறார். உலகை உய்ய வைக்கிறார். உயிர்களில் சிற்சபையில் (அறிவு விளங்குமிடமிருந்து மெய்ஞ்ஞானிகளை, விஞ்ஞானிகளை உருவாக்குகிறார். உத்தரசிற்சபை என்பது வட திசையிலுள்ள வெளி வடலூரரைக்குறிக்கும். மனித தேகத்தில் காரியப்படுகிறார். எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கிறார்.

எந்தவித ஆதார மற்ற பண, பலம், பதவி பலம் இல்லாத ஒன்றிற்கும் உதவாதவன் (திரணம்) இரக்கமே. அன்பே வடிவமானால் இறைவன் திருவருளால் ஐந்தொழில் செய்யும் அருள்ஒளி வல்லபத்தை பெறுகிறான். மனிதன் மாமனிதனாக உய்ய உடல், உள்ளம், உயிரைத்தந்தவர் ஆண்டவரே. **சிற்சபையின் கண் மனதை செலுத்துவதைத்தவிர மற்ற எந்தவித ஆபாசத்திலும் செலுத்தாது மனதை இழுத்து புருவமத்தியில் நிறுத்த வேண்டும்** இதுவே ஆண்டவருக்கு உடல் உள்ளம் உயிரை அர்ப்பணிப்பதாகும். (கரணம்) எனையும் தானாக்க என்பது மனிதன் தெய்வமாக மாறுவதாகும். வள்ளற்பெருமான் நித்திய மனித ஒளி தேகத்தைப் பெற்று இன்றும் உலகெங்கும் சன்மார்க்க கொள்கைகளைப் பரப்பி கொண்டிருக்கிறார். பன்மார்க்கம் சொல்லும் மூடப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி உடலை வருத்தி கொள்ளாதீர்கள். (உயங்காதீர்) உலகியல் மண், பெண், பொன் பேர் ஆசையில் மயங்காதீர் புலை கொலை தவிருங்கள். இப்பொழுதே சன் மார்க்கத்திற்கு வந்து திருந்துங்கள்.

கரணமிகக் களிப்புறவே கடல், உலகும், வானும் அதிபதி என்று ஆளுகின்றீர். அதிபதியீர். நீவீர் மரணபயம் தவிராதே வாழ்வதில் என்பயனோ கரணம் என்பது மனம், புத்தி, சித்தம். அகங்காரத்தைக்குறிக்கும். நினைப்பது மனம், நல்லவை தீயவை உணர்த்துவது புத்தி. தீர்மானிப்பது சித்தம். செயல்படுத்துவது அகங்காரம். முற்பிறவியில் செய்த நல்வினையால் மனிதப்பிறவி கிடைத்தது. அதைவிட வளர்ந்த வல்லரசுநாட்டை ஆளும் குடும்பத்தில் பிறந்து ஜனாதிபதி (அதிபதி) ஆகிவிட்டான். பலகோடி கணக்கில் செலவிட்டு விஞ்ஞானத்தைபயன் படுத்தி உலக நாடுகளை மக்களை அழிக்கக் கூடிய போர்க்கருவிகளை உருவாக்கி கொண்டான். நில உலகம், கீழ் உலகம் (பசிபிக்கடல்) மேல்

உலகம் (செவ்வாய்கிரகம்) எங்களுக்கே சொந்தமானது. நானே அவைகளுக்கும் ஜனாதிபதி, சர்வாதிகாரி என்கிறான். வளரும் நாடுகளை, வளராத நாடுகளை அடிமைப்படுத்த விஞ்ஞான கருவிகளை காட்டிபயப்படுத்துகிறான். மற்ற நாடுகள் முன்னேறாதபடி தீவிரவாதிகளைக் கொண்டு தொல்லைகளை தருகிறான். சர்வதிகாரி என்ற ஆணவத்தால், எந்த நேரத்திலும் தனக்கு வரும் மரணத்தைப் பற்றி சிந்திப்பதில்லை.

நடுநிலை இல்லா கூட்டத்தை கருணை
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதிகாரச் கேடரை
பொய்யலால் கிளத்தா
படுநிலை அவரை பார்த்த போதெல்லாம்
பயந்தனன் சுத்தசன்மார்க்க
விடுநிலை உலக நடையெல்லாம் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்

1. நியாயத்தை தருமத்தை விரும்பாதவர்கள்
2. இரக்கமே இல்லா அரசனை போன்றவர்கள்
3. தினமும் யாரை கெடுக்கலாம் என்று ஏமாற்ற சிந்திக்கும் சிறு அதிகாரிகளைப் போன்றவர்கள்
4. நல்லதைபேசாத பொய்யையே பேசும் படுபாதகர்கள்.
5. சுத்த சன்மார்க்க கொள்கைகள் உலக வாழ்க்கைக்கு ஒத்து வராது என்பவர்கள்.
6. நச்சுடைய பாம்பைப் போன்ற குண முடையவர்கள் துன்மார்க்கிகளே. அவர்கள் மரணத்தை நினைத்து பார்த்து திருந்தி சன்மார்க்க சங்கத்தில் சேரா விட்டால் புழுவாக பிராணிகளாக பிறந்து வாடுவார்கள்.